காசி ஹிமாலயா தீர்த்த யாத்திரை



ஹிமாலய யாத்திரை 8-9-1996 to 5-10-1996

தாம யாத்திரை 18-9-1996 to 13-10-1996



முதற் பகுதி

காசி-இமாலய தீர்த்த யாத்திரை

1996 செப்டம்பர் 8 முதல் அக்டோபர் 5 வரை
(28 நாட்கள்)

கல்கத்தா, புத்தகயை, சார்நாத், நேப்பாள், காசி, அலகபாத், அயோத்யா, ஆக்ரா, பிருந்தாவனம், மதுரா, கோவர்த்தனம், பத்ரீநாத், ஜோதிர்மட், கேதார்நாத், கௌரீகுண்ட், ரிஷீகேசம், ஹரித்வார், டில்லி.



இரண்டாம் பகுதி

சதுர்தாம தீர்த்த யாத்திரை

(நான்கு தலங்கள்)

1996 செப்டம்பர் 18 முதல் அக்டோபர் 13 வரை
(26 நாட்கள்)

டில்லி, ஹரித்வார், ரிஷீகேசம், ஹனுமான் சட்டி, யமுனோத்தரி, உத்தர்காசி, பைரவகாட், கங்கோத்தரி, ருத்திரப்ரயாக், கௌரீகுண்ட், கேதார்நாத், ஜோதிர்மடம், பத்ரீநாத், ஆக்ரா, மதுரா, பிருந்தாவனம், கோவர்த்தனம்.

ௐ

அணிந்துரை

ஓம் நமோ பகவதே ராமகிருஷ்ணாய

பாரதநாடு மிகப்பெரும் புண்ணிய நாடு இருஷி முனிவர்களின் ஆன்மீக ஞானத்தின் உறைவிடம் இது உலகடங்கலுக்கும் சாந்தியை அளிக்க வல்ல ஆன்மீக ஞானச்சுடர் எப்போதும் ஒளிவிட்டுக் கொண்டிருக்கும் நாடு இது.

இத்தகைய நாட்டில் ஒருவன் பிறப்பதும் புண்ணிய பலத்தால் மட்டுந்தான் முடியும் என ஞானியர் கூறுவர். பிறந்தால் மட்டும் போதாது, பாரதத்தின் சிறப்பிற்குக் காரணங்களாய் விளங்கும் மலைகளையும் நதிகளையும் சிறப்பு என்னவென்று நேரிடையாய் அறிந்து, அதனால் பொங்கி வரும் பேரின்ப உணர்வில் மூழ்கவும் வேண்டும்.

தேவதாத்மாவாகிய இமயமலையின் சிறப்புக்களும், அதன் சிகரங்களில் திகழ்கின்ற பேராலயங்களின் ஒளியும் அழகும் மனிதனின் மனத்தை எளிதிற் கவர்ந்து இறைவனிடம் கொண்டு சேர்க்கும் அஃதே போன்று கங்கை, யமுனை முதலிய நதிகளும் அவைகளின் தீர்த்த கட்டங்களும் மனிதனின் மனமாசுகளை களைந்து அவனுக்குத் தூய்மையும் வீடு பேறும் அளிக்கின்றன.

நவ நாகரீகத்தின் எல்லையை கண்டவர்களும், உலகசுக போகங்களில் திளைக்கின்றவர்களுமாகிய மேலை நாட்டார் பலர், மன அமைதிக்காகவும், நிறைவிற்காகவும் பாரதத்திற்கு வந்து வாழ்வின் குறிக்கோளை அடைய முயற்சிக்கின்றனர். அவர்கள் நமது வேதாந்த தத்துவ நூற்களையும் அவைகளை உபதேசித்தளித்த ரிஷி முனிவர்

களையும் வாழ்த்தி வணங்குகின்றனர் அம்முனி புங்கவர்கள் வாழ்ந்து தவம் புரிந்த சோலைகளையும், குகைகளையும், தரிசித்துப் பேரின்பம் அடைகின்றனர். பிறநாட்டவரின் நிலைமை இதுவானால் இங்கே பிறந்து வளர்ந்தவர்களது நிலைமைபற்றித் தனியாக எடுத்துக்கூற வேண்டிய தேவையில்லை.

இமயமலையின் சிறப்பு சொல்லுக்கு அடங்குவதன்று. ஸ்ரீசுகபிரம்மரிஷி பரீக்ஷத்திற்குப் பாகவதம் உபதேசம் பண்ணிய ஹரித்வாரம் இமய மலையின் கோட்டைவாயிலாகும். ''ஹரே ராம... ஹரே கிருஷ்ண'' மகாமந்திரம் பாரதநாடு முழுவதிலும் சென்று முழக்கமிட்ட நாமப்பிரச்சார ஆச்சாரியர் சற்குரு அபேதானந்தர் திருவடிகள் ஜலசமாதி கொண்ட ''[illegible]'' என்ற கங்கா நதிப்படித்துறை ஹரித்வாருக்கு அருகாமையிலுள்ளது.

ரிஷி முனிவர்களின் தவவாழ்வால் தூய்மை பெற்ற ரிஷீகேசம் இமயமலைச் சாரலில்தான் திகழ்கின்றது. ரைப்யன் என்ற ரிஷி ரிஷீகங்களை (ஐம்பொறிகளை) அடக்கித் தவஞ் செய்து வாழ்ந்த இடமே ரிஷீகேசம். ஸப்தரிஷிகள் இங்கு தவவாழ்க்கை வாழ்ந்திருந்தனர். ஸ்ரீசங்கராச்சாரிய ஸ்வாமி முதலிய ஆச்சாரியர்களும் தவஞ்செய்த இடமிது. தற்போதும் எண்ணிறந்த ஞானிகளும் அடியார்களும் இங்கு தங்கி தவம் செய்து வருகின்றனர்.

புண்ணியத் தலங்களான சதுர்தாமங்களில் (நாற்பெருங்கோயில் தலங்கள்) உட்பட்ட யமுனோத்தரி ரிஷீகேசத்திலிருந்து 200 கி.மீ. வடமேற்கில் இருக்கிறது. காளிந்தி என்ற யமுனா நதியின் பிறப்பிடமாகும். இது மட்டுமல்ல யமுனையின் ஒழுக்கு இங்கு வடதிசை நோக்கிசெல்கிறது.

யமுனோத்தரிக்கும் தெற்கே மிகப்பழமை வாய்ந்த உத்தரகாசிக்ஷேத்திரம் திகழ்கிறது. இது பூர்வகாசியைப் (வாரணாசி) போன்றதோர் முக்கிய

மான சிவாலயமாகும். தற்கால ஞானிகளில் புகழ் பெற்றிருந்த ஸ்ரீதபோவன சுவாமிகள் பல்லாண்டு வாழ்ந்து தவஞ்செய்து சமாதிகொண்ட தலமாகும் இது. அவரது தவச்சாலையில் அவரது சீடராகிய ஸ்ரீசின்மயானந்த சுவாமிகள் பெரிய ஆசிரமம் ஒன்று கட்டியுள்ளார்கள்.

இதற்கும் வடகிழக்கில் இருக்கும் கங்கோத்தரியும் சதுர்தாமத்தில் (நாற்பெருங்கோயில்கள்) உட்பட்ட திருத்தலமாகும். இங்கு கங்காநதி வடதிசை நோக்கி ஒழுகுகிறது. இங்கு கங்காதேவிக்கு ஆலயமுண்டு. சங்கராச்சாரிய சுவாமிகள் தான் இதை நிறுவியவர்.

இமயமலைச்சிகரத்தில் திகழும் மற்றொரு திருத்தலம் கேதாரநாதம். இங்குள்ள கேதாரேசுவரர் சுயம்புலிங்கமாகும், 11000 அடி உயரமுள்ள ஒரு சம வெளியில் இக்கோவில் இருக்கிறது. பஞ்சபாண்டவர்களுக்காக இந்தச் சுயம்புலிங்கம் உண்டானதென்றும், அவர்களே முதன் முதலாக ஆலயம் கட்டினர் என்றும் கூறுவர் பிற்காலத்தில் சங்கராச்சாரிய சுவாமிகள் ஆலயத்தை புதுப்பித்து அதன் பூசாரிகளாக தென்னிந்தியாவிலுள்ள சைவப்பெரியோர்களை ஏற்படுத்தினார்.

சங்கராச்சாரிய சுவாமிகள் இறைவனோடு கலந்ததும் இவ்விடத்தில் தான்.

பத்ரிநாதம் என்பது பிறிதொரு திருத்தலம் ஆகும். நரநாராயண பர்வதங்களுக்கிடையில் இத்தலம் அமைந்துள்ளது. சதுர்தாமங்களில் (நாற்பெரும் கோயில்கள்) இதுவும் ஒன்று. நரநாராயண ரிஷிகள் தவம் செய்த இடமாகும்இது வேதவியாசர், சுகர், கௌடபாதர் முதலிய முன் புங்கவர்கள் வாழ்ந்து தவம் செய்த இடமாகும். பகவான் வேதவியாசர் வேதங்களை நான்காக வகுத்ததும் மகாபாரதம் எழுதியதும் இதற்கு அருகாமையில்

உள்ள வியாசர் குகையிலாகும் பகவான் ஸ்ரீகிருஷ்ணரு டைய ஆணைப்படி தவம் இயற்ற உத்தவர் இங்கே தான் சென்று சேர்ந்தார்.

புண்ணிய பாரதத்தின் தெய்வீக சக்திக்கும் பெருமைக்கும் காரணமான கங்கை, யமுனை, சரயு என்ற நதிகளும் இமயமலையிலிருந்து புறப்படும் தெய்வீக தீர்த்தங்கள் ஆகும். இங்கு உள்ள தீர்த்த துறைகளில் மூழ்கி எழும் அடியார்களுக்கு சுகம் மட்டுமல்ல முக்தியும் ஏற்படும். இகத்திலும் பரத்திலும் நற்கதி அடைய மற்றொன்றும் வேண்டியதில்லை.

ஸ்ரீராம ஜென்ம பூமியான அயோத்தியும் ஸ்ரீகிருஷ்ணரின் லீலாரெங்கமாகிய பிருந்தாவனமும் முக்கியமான புண்ணிய ஸ்தலங்கள் ஆகும் திரேதாயுகத்தில் அவதரித்த ஸ்ரீராமனின் வரலாற்றை வெளிப்படுத்துகின்ற எண்ணற்ற நினைவுச் சின்னங்கள் அயோத்தியில் இன்றும் காணலாம். ஸ்ரீ கிருஷ்ணரின் அவதார ஸ்தலமாகிய மதுராபுரியில் ராசக்கிரீடை முதலிய லீலைகள் நடத்திய பிருந்தாவனமும் பாரதியர் அனை வருடையவும் வழிபாட்டு மையங்கள் ஆகும். அந்தப் புண்ணிய பூமிகளில் நிறைந்து நிற்கும் பக்தி வெள்ளத் தில் மூழ்கித் திளைக்க முற்பிறவியில் புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

வருணா, அசி என்ற நதிகள் ஒன்று சேரும் இடமான வாரணாசி (காசி) மிகப்புனிதமான ஒரு புண்ணிய ஸ்தலமாகும். கங்கைக்கரையில் காசி விஸ்வநாதர் ஆலயம் திகழ்கிறது பண்டைகாலம் முதலே காசி விசுவநாத தரிசனம் மோட்சம் தருவது என்று ஹிந்துக்கள் நம்பி வழிபட்டு வருகிறார்கள்.

உலகத்தில் ஹிந்து நாடு என்று சொல்ல ஒருநாடு உண்டு என்றால் அப்பொருட்கு உரியநாடு நேப்பாளமாகும். சிறுதுகாலம் முன்வரை அரசனின் ஆட்சியின் கீழ் இருந்த இந்நாடு தற்பொழுது ஜனநாயக முறையில் தனது ஆட்சியை மாற்றி சிறப்புடன் விளங்குகிறது இதன் தலைநகரம் ஹாட்மண்டு உலகத்திலே 5000 சிவ லிங்கங்கள் ஒரே இடத்தில் பிரதிஷ்டை பண்ணி வழிபாடு

நடைபெறுகிறது என்றால் அது இந்நாட்டிற்கு உரிய தனி சிறப்பாகும் இங்குள்ள பசுபதிநாத திருக்கோவில் மிகவும் புகழ்பெற்ற ஒரு சிவஸ்தலம் சிவபக்தர்கள் வழிபட வேண்டிய ஒரு முக்கியமான இடம்.

காசியிலிருந்து 300 கிலோமீட்டர் கிழக்கே இருப்பது 'கயா' வாகும் இந்தியர்கள் மட்டுமல்ல உலகமெங்குமுள்ள புத்த மதத்தவரும் இதனை தீர்த்தத் தலமாக கருதுகின்றனர்.

சித்தார்த்த அரசகுமாரன் கடுந்தவம் செய்து போதம் பெற்று புத்தபகவான் ஆனது இங்கே தான். அந்தப்போதிமரம் (அரசு) இன்றும் இங்கு காணப்படுகிறது.

வங்காளத்திலுள்ள பல திருத்தலங்களும் யாத்திரை வாசிகளை கவருகின்றன. ஸ்ரீராம கிருஷ்ணதேவர், சாரதாதேவி, விவேகானந்த சுவாமிகள், ரவீந்திர நாததாகூர், முதலியோரின் தெய்வீக ஒளி சுடர்விட்டிலங்கும் திருத்தலங் களைத் தரிசிப்பவர்களின் உள்ளத்தில் தெய்வீக அமைதி ஏற்படுவது திண்ணம்.

இமாலய யாத்திரையில் உள்ளங்குளிர வைத்த கங்காதேவியின் பிறப்பிடமும், அதைத் தொடர்ந்து அதன் பிரவாகத்தையும் கண்டு கண்டு அது கடலில் கலக்கும் இடமான கல்கத்தாவை அடையும் போது, தீர்த்த யாத்திரியின் உள்ளத்திலும் இன்பகங்கை ஊற்றெடுக்கும்.

இவ்வாண்டு தீர்த்தயாத்திரை சற்று வேறுபட்ட நிகழ்ச்சிகளுடன் இரண்டு கட்டங் களாக நடத்தப்படும். ஒன்றாம் கட்டத்தில் சதுர் தாமங்கள் (நாற்பெருங்கோயில்கள்) யமுனோத்தரி கங்கோத்தரி, கேதார்நாத் பத்ரீநாத், உட்படவுள்ள உத்தராகண்ட யாத்திரையும், இரண்டாவது கட்டத்தில் முன்னாண்டுகளைப்போல, காசி

இமாலயதீர்த்தயாத்திரையும் ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளது.

ஆன்மீக நிறைவும், இன்பமும் கிடைக்கின்ற காசி இமாலய யாத்திரைக்கு தலைமை வகித்து அன்பர்களை ஆசீர்வதிக்கும் அப்பிகானந்த சுவாமிகளுடையவும், கண்வீனர் திரு S. கிருஷ்ணன் நாயருடையவும் இத்தகைய நல்ல முயற்சிகள் எவ்வளவு சிரமம் உள்ளதாயினும் ஆண்டவன் திருவுள்ளம் அதுவென கூறுவது பொருத்தமே. இவர்களுடைய நல்ல முயற்சி வெற்றியடைவ-தாக! இதற்கு முன் நடந்த 17 தீர்த்த யாத்திரைகளும் நல்ல முறையில் நடந்தது இறைவன் திருவருளே.

தென்னிந்திய பயணிகளுக்கு தென்னிந்திய முறையில் உள்ள உணவு வசதி ஏற்பாடு இதன் பொறுப்பாளர்களுடைய நல்லெண்ணத்தையும், கடமையுணர்வையும் வெளிப்படுத்துகிறது. இது மற்ற யாத்திரை குழுக்களில் கிடைக்காத ஒரு அபூர்வ வசதி ஆகும்.

இவ் ஆண்டு நடைபெறும் 18, 19-ாம் தீர்த்த யாத்திரைக்குரிய ஏற்பாடுகள் தொடங்கியிருக்கின்றன. சதுர்தாம யாத்திரைக்கு 26 நாட்கள் யாத்திரைக்கான வாகன கட்டணம், ஜாகை, உணவு இவைகளெல்லாம் சேர்ந்து ஒரு ஆளுக்கு 8300 - ரூபாயும் 28 நாட்கள் காசி இமாலய யாத்திரைக்கு 8500 ரூபாயும் ஒரு நபர் கொடுக்க வேண்டும் ஒரு பயணிக்கு இவ்வளவு சிறப்பான ஒரு யாத்திரைக்கு இந்ததொகை இலாபகரமே. இந்த யாத்திரை நடத்தும் பொறுப்பாளிகளுக்கும் பயணிகளுக்கும் எல்லாவித மங்களமும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கொடுத்தருள்வாராக!

இவண்,

சுவாமி மதுராநந்தா

ஸ்ரீ விவேகானந்தா மந்திரம், வெள்ளிமலை

ௐ

இன்பமும் மன நிறைவும் பெறுவதற்காக மனிதன் அனேகவழிகளில் இடையறாது முயன்று கொண்டே இருக்கிறான். தொடக்க நிலையில் ஐம்பொறிகளுக்கும் உரிய உலக விஷயங்களில் முயன்று அவைகள் மூலம் இன்பமும் மன நிறைவும் அடைவதற்காக எல்லோரும் முயல்கின்றனர். ஆனால் அனுபவம் மூலம் உலகசுகங்களில் நிலையாமையையும் அவைகளிடம் கொண்ட அளவற்ற பற்றினாலேற்படும் துயரங்களையும் உணரும் போது துன்பமற்றதும் அழிவில்லாததுமாகிய சுகம் எங்கே, எங்ஙனம் கிடைக்குமென்று ஆராயத்தொடங்குகிறான் அவ்வாறு ஐம்பொறிகளுடை-யவும் விஷயானந்தத்தை துறந்து பஜனானந்தமாகிய இறைவழிபாட்டில் மனம் திரும்புகிறது ஆலய வழிபாடு தீர்த்தயாத்திரை, நல்லோருறவு, முதலியவற்றில் அப்போது மனிதனின் மனம் இன்பத்தை காண்கிறது. இத்தகைய பஜனானந்தமாகிய வழி பாட்டின்பமும், தேசம் காலம் ஆகியவற்றின் எல்லைக்குட்பட்டவையே என அறியும் போது மனிதன் முற்றிலும் அகநோக்-குடையவனாகிய ஆத்மானந்தத்தை தேடுகின்றான் அதன் பயனாக கடவுட்காட்சி பெற்று பேரின்பமடைகின்றான்

மிகச்சில புண்ணியவான்களுக்கு மட்டுமே உலக இன்பங்களில் சலிப்பு ஏற்பட்டு இறைநாட்டத்தில் இன்புற முடிகிறது அவர்களிலும் ஆயிரத்தில் ஒன்றோ இரண்டோ பேருக்குமட்டுமே ஆன்மீக சாதனைகளில் நம்பிக்கை ஏற்பட்டு வெற்றிபெற முடிகிறது அதனால் மனிதனின் எல்லா முயற்சிகளுடையவும மேலான குறிக்கோள் ஆன்ம முன்னேற்றமே என்ற நம்பிக்கை

யுடன் மனிதன் உலகில் வாழவேண்டும் அத்தகைய நம்பிக்கை வாழ்க்கைப் பயணத்திலேற்பட்டிருக்கும் யாவருக்கும் எப்போதும இருக்க வேண்டியது அவசியம் அப்படியிருக்க தீர்த்த யாத்திரிகளின் காரியத்தை எடுத்து செல்லவும் வேண்டுமா? பக்தர்களுக்கிடையே இந்த நம்பிக்கையை வளர்ப்பதற்காக ஸ்ரீ அம்பிகானந்த சுவாமிகள் அனேக ஆண்டுகளாக நடத்தி வருகின்ற தீர்த்தயாத்திரை நிகழ்ச்சிக்கு எங்கும் நிறைந்த இறைவன் எல்லா வகையான மங்களங்களும் அருள்புரியப் பிரார்த்திக்கிறேன்

சங்கரானந்தசுவாமி

ஸ்ரீ ராமகிருஷ்ணாசிரமம், சாஸ்தமங்கலம்.

திருவனந்தபுரம்-695010

தொலைபேசி:

ௐ

சற்குருவே நம:

அனந்தகோடிப் பிறவிகளில் ஈட்டிய புண்ணியத்தின் பயனால் மட்டுமே ஓர் உயிருக்கு மனிதப் பிறவி கிடைக்கின்றது. மஹான்களுடைய உபதேசங்களும் அருளாசிகளும் கொண்டு தடையின்றி ஒழுகிச் செல்கின்ற. தூய தெய்வீகமானதோர் ஆறு போன்றது மனித வாழ்க்கை பயணம். பாரதத் தாயின் விரிந்த மார்பு வழியாக விரைந்து செல்லும் மாண்புடைய கங்காநதி இமயமலைச் சிகரங்களி-லிருந்து கீழே இறங்கி சமவெளி இடங்களை தொட்டு தழுவிக் கொண்டு பல்லாயிரக்கணக்கான

மக்களுக்கு ஆறுதலும் அபயமும் அளிக்கின்றாள் இன்றும் அந்த புனித பெயரை கேட்டதும் தலைவணங்காதவர்கள் இல்லை இலைகளும் பூக்களும் மறைந்த மரங்களின் ஈட்டங்களையும்

செடி கொடிகளின் சோலைகளையும் கொண்டு நிறைந்த அழகு வாய்ந்த ஆற்றங்கரைகள் புண்ணியவான்களான ரிஷி முனிவர்களின் கடும் தவத்தால் அருளும், ஆற்றலும் பெற்றுத் திகழ்கின்றன. பேராறுகள், மாமலைகள், பெருந்தவசிகள் நீராடும் படித்துறைகள் போன்ற தெய்வீக உணர்வுகளை எழுப்புகின்ற அழகிய காட்சிகள் பாரதத்தில்

ஏராளம் உண்டு. அவைகளையெல்லாம் ஒருமுறை காண்பதற்கும், பண்பாட்டின் பாரம் பரியத்தை புதுப்பிப்பதற்கும் பாரதியன் ஒருவனுக்கு வாய்க்கின்றதோர் தருணம் அவனுக்கு சொர்க்க சுகத்தை கொடுக்கிறது. முனிபுங்கவர்களாகிய தெய்வீகக் கவிகளின் கவிதைப் படைப்பிற்கு புத்துயிர்

கொடுத்த சாட்சிகள் இன்னும் நாம் காணாமல் இருக்கின்றோம். வானளாவும் மலைச்சிகரங்களும் இதர இயற்கைக் காட்சிகளும் இமயமலை சாரல் முதல் கன்னியாகுமரி கடல் வரையிலும் பரவிக் கிடக்கின்றன. பேராலயங்களும், பெரும் ஞானி களின் தவச்சாலைகளும், சமாதி ஸ்தலங்களும் தரிசனம் செய்து புண்ணியம் ஈட்டுவதற்கான

அரியதோர் வாய்ப்பாகும் தீர்த்த யாத்திரை உடலும் மனமும் தெய்வீக அனுபூதியின் பரவசத்தைப் பெறுகின்ற மிக மேலான இந்த முயற்சி வாலிபர் முதல் வயோதிகர் வரையுள்ள யாவருக்கும் நன்மை பயப்பதாகும். வாழ்க்கைப் போராட்டத்தில்

முனைந்து வெறிபிடித்த வாழ்க்கையால் உள்ளம் உடைந்தவர்களுக்கு அமைதி நிறைந்த வாழ்வின் இனிமையை இத்தகைய தீர்த்த யாத்திரைகள் அளிக்கின்றன. அசுரகுணங்கள் நிறைந்து அதன் பயனாம் மனித வாழ்க்கை அழிந்தொழிந்து போவ தற்கு முன்னால் அருள் நிறைந்த திருக்கோவில்-களை தரிசிப்பதற்கும். கங்கை போன்ற புண்ணிய

நதிகளில் மூழ்கி பாவங்கள் போக்குவதற்கும் இறையருளால் இது நல்லதொரு வாய்ப்பாகும். பாரத புண்ணிய பூமியை வலம் வருகின்ற இந்த யாத்திரை ஒருவரது வாழ்வை பேரின்ப மயமாக்கு வதற்கு துணைபுரிவதாகுக.

இவண்,

சுவாமி சத்தியானந்த சரஸ்வதி

ஸ்ரீ ராமதாஸமிஷன்

செங்கோட்டுக்கோணம்.

ௐ

பெரியோரிணக்கமும், அதன் மூலம் இயல்பாகவே கிடைக்கின்ற. ஆன்ம ஞானவுந்தான் எல்லாச்சமய சாத்திரங்களுடையவும் சாரமான தத்துவம் தீர்த்தயாத்திரை வெற்றிபெற வேண்டுமாயின் பெரியோர்கள் அதில் கலந்து கொள்ளல் வேண்டும் பெரியோர்களின் பார்ப்பிடங்கள் தாம் தீர்த்தயாத்திரை தலங்களாகின்றன நமது ஆலயங்களுடையவும், புண்ணிய தலங்களுடையயவும், தொடக்கத்தை ஆராய்ந்தால், அவைகளின் மூலஸ்தானமாக ஏதாவதொரு துறவியின் தியாகம் நிறைந்ததும், சத்தியம் முதலிய நற்குணங்கள் நிரம்பியதுமான வாழ்க்கை என்று கண்டு கொள்ள முடியும்.

வாழ்வின் மேலான குறிக்கோள் கடவுட்காட்சியாகும் ஆன்ம போதமே கடவுட்காட்சிக்கான ராஜபாவை தனக்கு அன்னியமாக வேறொன்றுமில்லை என இயல்பாகவே காண்கின்ற புண்ணியாத்மாக்களையே பெரியோர்கள், நல்லோர்கள் என்று அழைக்கிறோம்.

நாம் தேடிநிற்கும் சாந்தியினுடையவும், சுகத்தினுடையவும் அழிவற்ற சுரங்கம் பெரியோர்களின் பாதங்களில் தான் உறைகின்றது. பெரியோர்களின் திரு அருளால் ஆன்மாவின் அழிவற்ற சாம்ராஜ்யத்திற் புகுந்து நமக்கு அமர வாழ்வெய்த முடியும்.

பெரியோர்களைச் சேர்ந்த எல்லா விஷயங்களும் நமக்குள்ளிருக்கும் தெய்வதன்மையை எழுப்புபவையே \அதுபற்றியே அவர்களது உறைவிடங்களும், வார்த்தைகளும் நமக்கு ஒளியையும், ஊக்கத்தையும் தந்து வழிகாட்டிக்கொண்டிருக்கின்றன. பரம பாகவதனாகிய அம்பிகானந்த சுவாமிகளுடன் நடைபெறும் தீர்த்த யாத்திரை மிக அரியதோர் ஆன்மானுபூதியாகவே இருக்கும் சுவாமிகளின் அருள் நிறைந்த முன்னிலையினால் பயன் நிறைந்ததாகின்ற காசி–ஹிமாலய தீர்த்த யாத்திரைக்குள்ள நல்வாய்ப்பு ஏராளம் பேருக்குக் கிடைப்பதாக.

ஸத்சங்கத்தின் (பெரியோர் இணக்கத்தின்) அனுபூதியும் அதன் தரிசனமும் நிறைய நிறைய தந்தருளுவதற்கும் அம்பிகானந்த சுவாமிகளுக்கு முடியும்.

சுவாமிகளின் கருணையும் அன்பும் தீர்த்த யாத்திரிகளுக்கு நிழலாகத் திகழ்வதாக!

மக்கள்மேல் வைத்த அன்பினாலுந்தப் பெற்று பெரிய லக்ஷியத்துடன் ஆக்க இந்த யாத்திரையை நடத்திசெல்ல சுவாமிகளுக்கு நீண்ட ஆயுளும், ஆரோக்கியமும் ஆண்டவனருள் வாராக என்று வேண்டுகின்ற

சுவாமி சரசுவதிசுானந்தி,
ஸ்ரீ நாராயண தர்ம சங்கம் டிரஸ்ட்
சிவகிரிமடம், வர்க்கலை–695 141.

காசி-ஹிமாலயா யாத்திரை விளக்கம்

8–9–'96 (ஞாயிறு) ஒன்றாம் நாள்

மாலை மணி 4–40–க்கு கொச்சின்–ஹௌறா எக்ஸ்பிரஸ் (எண் 6315) ரயிலில் எர்ணாகுளம் சந்திப்பிலிருந்து கல்கட்டாவுக்கு புறப்படுதல்.

(இந்த ரயில் வண்டி பாலக்காடு, ஈரோடு, சேலம் சென்னை வழி கல்கத்தா செல்கிறது)

9–9–'96 (திங்கள்) இரண்டாம் நாள்

ரயிலில்

10–9–'96 (செவ்வாய்) மூன்றாம் நாள்

மதியம் 2 மணிக்கு கல்கத்தா சென்று ஓய்வு

11–9–'96 (புதன்) நான்காம் நாள்

கல்கத்தாவிலுள்ள முக்கிய தலங்களைக் காணுதல் அன்று கல்கத்தாவிலேயே தங்கி ஓய்வு

கல்கத்தா:

பாரதத்திலுள்ள மிகப்பழமையும் பெருமையும் வாய்ந்ததோர் மாநகரம் மேற்கு வங்க நாட்டின் தலைநகராகிய இவ்வூர் ஜனத் தொகையில் முதலிடம் பெற்று நிற்பதாகும், ஹுக்ளி நதியிலுள்ள ஹௌராபாலமும் மற்றும் பெரும் பெரிய மாளிகைகளால் சூழப்பெற்ற இம்மாநகரம் அற்புதக் காட்சிகளாம் கட்டிடக் கலைக்குப் பேர் போன இந்நகரில் எத்தனையோ பெரிய மகான்களும் தேசபக்தர்களும் தோன்றி

உள்ளனர், ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள், மகாகவி ரவீந்திர நாத்தாகூர், சுபாஷ்சந்திரபோஸ், தேசபந்து, சி. ஆர். தாஸ் ஆகியோரின் பிறப்பிடமிது வங்காள நாட்டில் சைதன்யமகா பிரபு, அரவிந்தர் போன்றோர் தோன்றினர், அத்தகைய புண்ணிய நாடிது.

பேலூர்மடம்:

ஹுக்ளி நதியின்கரை ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் பெயரில் விவேகானந்த சுவாமிகள் கட்டிய பேராலயமும் மடமும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷனின் தலைமை அலுவலகம் இங்கு தான். ஸ்ரீராமகிருஷ்ணமிஷனைச் சேர்ந்த பிரம்மசாரிகளுக்கான குருகுல கல்வியும் பயிற்சியும் அளிப்பதற்கானதோர் பிரம்ம வித்யாலயம் இங்குள்ளது.

ரா.கி. மிஷனது பொறுப்பில் நடைபெறும் ஓர் கல்லூரியும் தொழிற்கல்லூரியும், மருத்துவ மனையும் இங்கு உள்ளன. ''எழுந்திரு, விழித்திரு, கருதிய கருமம் கைகூடும் வரை சலியாதுழைத்திரு'' என்று பறை சாற்றிய சுவாமி விவேகானந்தரின் செயல்முறை வேதாந்தம் வழி பணி செய்து வாழும் துறவிய பெருமக்கள், தங்கள் பணிகளை வெற்றிகரமாகச் செய்து உலகமெங்கும் வெற்றிக் கொடியை நாட்டியுள்ளனர்.

விவேகானந்த சுவாமிகளின் சமாதிபீடம் இங்குதான். அதற்கருகாமையிலேயே ஸ்ரீ சாரதா தேவியார் ஸ்ரீபிரம்மானந்தசுவாமிகள் ஆகியோரின் சமாதி பீடங்களும் உண்டு. பாரதத்திற்குள்ளும் வெளியிலுமுள்ள பக்தர் கூட்டம் தினமும் இங்கே வருகிறது.

தெட்சிணேஸ்வரம் ஆலயம்

கங்கைக்கரையிலுள்ள மகாகாளி கோவில் ராசமணி என்றவோர் ராணி கட்டியது. இந்தக் கோவிலில் வாலிபவயதிலேயே ஸ்ரீ ராமகிருஷ்ணர் பூஜாரியானார். தீவிரமான பக்தியினால் காளி தேவியின் காட்சியை பெற்றார். இக்கோவிலில் 12 சிவாலயங்களும், ஒரு ராதாகாந்தர் கோவிலுமுள்ளன.

கல்கத்தா காளி கோவில்

காளி கட்டத்திலுள்ள இக்கோவிலுக்கு 350 ஆண்டுகள் பழமை உண்டு தட்சயாகத்தில் ஓம குண்டத்தில் குதித்து உயிரை விட்ட சதீதேவியின் உடலை தோளில் சுமந்து தன்னை மறந்து தாண்டவமாடிய சிவனை அதிலிருந்து தடுக்க விஷ்ணு பகவான் சதீதேவியின் உடலை சக்கராயுதத்தினால் முறிக்க தொடங்கினார். தேவியின் விரல்களில் ஒன்று முதலில் விழுந்தது இங்கு தான் எனக் கூறப்படுகிறது. அதனால் அங்கு ஏற்பட்ட தேவி கோவிலுக்கு காளிகட்டம் என்று பெயருண்டாயிற்று. நாளடைவில் அது கல்கட்டா என்று மருவியது.

விக்டோரியா நினைவாலையம்:

விக்டோரியா ராணியின் நினைவாகக் கட்டிய ஒரு மார்பிள் மாளிகை எட்வர்ட்ஏழாமன் சக்கரவர்த்தி தான் இதற்கு அடிக்கல் நாட்டியது அந்தச் சக்கரவர்த்தியின் மகன் ஜார்ஜ் அஞ்சாமன் 1921-ல் இம்மாளிகையைத் திறந்து வைத்தார்.

12-9-1996 (வியாழன்) ஐந்தாம் நாள்

காலையில் 5 மணி கல்கத்தாவிலிருந்து கிளம்பி காசிசேவாசிரமம், காமார்புகூர், ஜயராம்வாடி ஆகியத்தலங்களை தரிசித்து துர்க்காபூரை அடைந்து ஓய்வு.

காசி சேவாசிரமம்:

சேவாசிரமம் டிரஸ்சின் மிகச்சிறந்த ஆசிரமமாகும் இது எழில் மிக்கது. காலை 7-30 -க்கு இங்கு வந்துசேருகிறோம். சுமார் 50 அடி உயரமுள்ள தாக்ஷ்யாயணியின் உடலை தோளிலேந் திய சிவபெருமானின் சிலை மற்றும் 100 அடி உயரமுள்ள ஆஞ்சநேயரின் விஸ்வரூப சிலையும் பாரதநாட்டில் வேறெங்கும் பார்க்க முடியாத புராண இதிகாச சார்புடைய மற்று சிற்பவடிவங் களும் ஏராளமான அளவில் இங்கு காணக் கிடைக்கிறது இங்கு தரிசனமும் காலை உணவும் முடித்து காமார்புகூர்க்கு புறப்படுகிறோம்

காமார்புகூர்:

தேசத்துரோகிகளான முகலாயருடையவும் ஆங்கிலேயர்களுடையவும் கொடிய அரசாட்சியி-னால் வறுமையிலும், அறியாமையிலும் உழன்று தருமபோதமும் கெட்ட இந்து சமூகத்தையும் அதன் மூலம் உலகனைத்தையும் முன்னேற்ற வந்து அவதரித்தவர் தான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர். அவரது பிறப்பினால் புனிதமடைந்த காமார்புகூர் இன்னொரு தீர்த்த தலமாகத் திகழ்கிறது. அவர் பிறந்த புனித வீடு முதலிய வற்றை அங்கே காணலாம்.

ஜெயராம்வாடி

ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் வாழ்க்கைத் துணைவியாரும் நித்திய கன்னிகையுமான ஸ்ரீசாரதாதேவி பிறந்து வளர்ந்தது ஜயராம்வாடி யிலாகும். இதுவும் ஸ்ரீ ராமகிருஷ்ண பக்தர்களின் தீர்த்ததலமாகும்.

13–9–1996 வெள்ளி (6–ம் நாள்)

அதிகாலை 5 மணிக்கு துர்க்காபூரிலிருந்து கிளம்பி பீஹாரில் கயாவில் போய் ஓய்வு.

14–9–1996 சனி (7–ம் நாள்)

காலை 5 மணிக்கு கயாவில் பலிகர்மங்கள் செய்து பின் அங்கு உள்ள முக்கிய இடங்களை பார்த்து காசியில் ஓய்வு.

கயா

சித்தார்த்த அரசகுமாரன் தவஞ்செய்த புண்ணிய தலம். அவருக்கு போதம் கிடைத்ததும் இங்குதான். போதிமரம் (அரசு) இப்போதும் நிற்கிறது. அப்புனித மரத்தின் இலையை விலைக்கு வாங்கலாம். இங்கு பெரியதோர் புத்தர் கோவிலுள்ளது.

பர்மா, சிலோண், சிங்கப்பூர், மலேஷியா சைனா, தாய்லாந்து, ஜப்பான், இந்தேனோஷியா ஆகிய நாடுகளிலுள்ள புத்தமதத்தினர் இங்கு வந்து பற்பல விஹாரங்கள் கட்டியுள்ளனர். இந்த விஹாரங்களில் ஒவ்வொரு நாட்டின் தனிக் கலைநுட்பங்களை காணலாம்.

பல்குனா நதிக்கரையில் புகழ் பெற்றதோர் விஷ்ணுபாத ஆலயமுண்டு. அங்கே பலிகருமாதி-கள் செய்வது மிகவும் சிறப்புடையது என ரிஷி முனிவர்கள் கூறியுள்ளனர். இந்த கயா சிரார்த்தம் செய்வதற்காகவே பக்தர்கள் இங்கு வருகின்றனர்.

15–9–1996 ஞாயிறு (8–ாம் நாள்)

காலையில் துயிலெழுந்து காசியின் புண்ணிய கங்கையில் பலிகர்மங்கள் முடித்து நீராடுகிறோம். பின்னர் ஸ்ரீ விசுவநாத தரிசனம், நீராடுதுறைகள், சாரநாத் துளசீமானஸ க்ஷேத்திரம் காசிராஜாவின் அரண்மனை, துர்க்கையம்மன் கோவில், குகை மந்திரம் முதலியனவும் தரிசித்தல்

காசி:

பாரதத்தின் மிகச்சிறந்த புண்ணிய நகரம் காசி. பண்டைகாலம் முதலே உலகின் பல திசைகளிலிருந்தும் பக்தர்கள் கால்நடையாக வந்து காசியை வழிபட்டு முக்தி பேறுபெற்றனர்.

பார்வதி கல்யாணத்தின் பின் சிவனும், பார்வதியும் இங்கு வந்து நிரந்தரமாகத் தங்கி இங்கு உயிர் விடுகிறவர்களுக்கு சிவசக்தியாகிய முக்தியைக் கொடுக்கிறார்கள். இந்த இடத்திற்கு அவிமுக்தமென்று பெயருண்டு. பிரம்ம குலத்தில் வந்த 'காசன்' என்ற ராஜரிஷி இங்கு அரசாட்சி செய்து வந்ததால் இதற்குக் காசி என்று பெயர் வந்ததென 'ஹரிவம்சம்' கூறுகிறது.

புராணப்புகழ்பெற்ற ஹரிச்சந்திரமஹாராஜா காசிராஜ்யத்தை ஆண்டு வந்தார் அவர் பேரில் ஒரு தீர்த்த கட்டமும். ஒரு மசானமும் உண்டு மொத்தம் 64 தீர்த்த கட்டங்களில் (நீராடுந் துறைகள்) 8 எண்ணம் மிக முக்கியமானவை,

1) ஹரிச்சந்திரகாட் 2) ஆவ்ராதகேசுவரகாட்
3) ஶ்ரீபார்வதீகாட் 4) ஐப்யேசுவரகாட்
5) மஹாலயகாட் 6) ப்ருகுகாட்
7)சண்டேஸ்வரகாட் 8) கேதார்காட்

இந்த தீர்த்த காட்டுகள் காசிவிஸ்வநாதர் ஆலயத்திற்குக் கிழக்கும் மேற்குமாகக் இருக்கின்றன. இந்த காட் அல்லது தீர்த்தக் கட்டங்களில் ஒவ்வொரு பெரியவர் நிறுவிய ஆலயங்களையும் தற்போது காணலாம். அவி முக்தத்தின் தீர்த்த கட்டங்களில் குளிப்பது, ஜப தியானங்களில் முழுகுவது சிராார்த்ததானாதிகள் செய்வது முதலிய எந்த கருமங்கள் செய்பவர்களுக் கும் பக்தியும் முக்தியும் உண்டாகுமென்பது இந்துக்களின் நம்பிக்கையாகும்.

கங்கையின் இரண்டு போஷக நதிகளாகிய 'வரணா' வினுடையவும் அஸியினுடையவும் நடுவிலுள்ள தலமாகிய வாரணாசியின் ஜனங்களை காஷாயர்கள் எனக்கூறுவர். காஷாய உடை அணிந்தவர்களுடையவும் வேத விற்பனர்களுடை-யவும் தலந்தான் காசி காசியின் சிறப்பை மகாபாரதம் கந்தபுராணம் முதலிய தெய்வீக நூல்கள் கூறுகின்றன.

மாலை வேளையில், கங்கைநதி வழியாக ஒடத்தில் போகும்போது தீர்த்ததுறைகளிலுள்ள ஆலயங்களுடையவும் பேரழகு வாய்ந்த காசியம் பதியினுடையவும் காட்சி நமக்கு மயிர்க்கூச்சலை உண்டாக்கும்,

விசுவநாதர் ஆலயம்:

காசிவிசுவநாதர் ஆலயத்திலுள்ள சிவ லிங்கத்தை பிரம்மதேவன் வந்து பிரதிஷ்டை பண்ணியதென ஹாலாஸ்யம் (திருவிளையாடற் புராணம்) கூறுகிறது. கங்கையில் நீராடி யாருக்கும் இங்கே பூஜை அபிஷேகம் செய்யலாம். இது இவ்வாலயத்தின் தனிசிறப்பாகும்.

இக்கோயிலை இன்றுள்ள நிலையில் 1776-ல் கட்டியவர் பக்தா திலகமாகிய அஹல்யாபாய் ஹோல்கர் ஆவார் ஔரங்கசீப் என்ற கொடியவன் அப்போதிருந்த பெரிய கோவிலை இடித்து பள்ளியாக மாற்றினான் 1835-ல் ரஞ்சித்சிங் என்ற ராஜா, அந்தப்பள்ளியின் ஒரு பாகத்தை கோவிலாகக்கட்டி, கோபுரத்தில் தங்கமுலாம் பூசினான்.

காசியில் பித்ருதர்ப்பணம் முதலியவை செய்தல் மிக புண்ணியமாகும் இறந்தவர்களின் எலும்பை கங்கையில் கரைப்பது புண்ணியம். நமது யாத்திரை வாசிகளுக்குத் தேவைப்பட்டால் அதற்கான வசதிகள் செய்து தரப்படும்.

சாரநாத்:

பகவான் புத்தர் ஞானோதயம் பெற்ற பின் முதன் முதலில் ஞானோபதேசம் பண்ணியது சாரநாத்திலாகும். அசோக சக்கரவர்த்தி புத்த சமயப் பிரச்சாரத்திற்காக முதலில் கட்டிய அசோகத் ஸ்தூபியும், கோயிலும் இங்குள்ளன.

சாரநாத் பார்த்தபின் அன்றிரவு காசியில் ஓய்வு.

<u>16-9-1996 திங்கள் (9-ம் நாள்)</u>

காலை 6 மணி முதல் காசியிலுள்ள பிற புண்ணியத் தலங்களைத் தரிசிக்க கிளம்புதல்.

பனாறஸ் இந்து பல்கலைகழகம்:

பண்டித மதனமோஹன மாளவியாஜீ இந்தப்பல்கலைகழகத்தை நிறுவினார். இதன் வளைவினுள் ஸ்ரீபிர்லாஜீ நிறுவிய ஸ்ரீவிசுவ நாதர் ஆலயம் உள்ளது. அது கண்கொள்ளாக் காட்சியாகும். இவ்வாலயம் சலவைக்கல்லாலானது. முதல் மாடியில் சிவபெருமானையும் இரண்டாம்மாடியில் லட்சுமிநாராயணரையும் பிரதிஷ்டித்துள்ளனர்.

துளஸீ மானஸா மந்திர்:

ராமசரித மானஸம் என்ற அரிய ஹிந்தி ராமாயண நூலின் பாடல்களையும் ராமாயண காட்சிகளையும் இங்கு காணலாம். இதனை ஹிந்தியில் எழுதியவர் கோஸ்வாமி துளசீதாஸ ராவார். இந்தகோவிலுக்கும் இரண்டுமாடிகளுண்டு கீழே ஸ்ரீ ராமரைப் பிரதிஷ்டித்துள்ளனர். மாடியின் வாசலில் துளசீதாஸரது சிலையைக் காணலாம் மின் சக்தி மூலம் அச்சிலையானது தலைஆட்டிக்கொண்டு ராமாயணம் வாசிப்பது எல்லாருடைய உள்ளத்தையும் கவரும் வாசிக்கிற ஒலியை கேட்கலாம். கம்ப்யூட்டர் மூலம் இது நடக்கிறது. இராமாயணம் இதிகாசத்திலுள்ள சீதா கலியாணம், வனவாசம் போதல், சீதாபகரணம் சுக்ரீவ நட்பு, அனுமனின் இலங்கை பயணம், ராவணவதம், முதலிய முக்கிய நிகழ்ச்சிகளை இங்கே அசைவுடன் காட்டுவர் காண்போர் அதிசயிக்குமாறு காட்சிகள் அமைக்கப் பெற்றுள்ளன.

ஸ்ரீ கிருஷ்ணரின் ராசலீலை, பூதனா மோட்சம் முதலியனவும் இவ்வாறு உயிருள்ளவை போன்று காட்டுவர்.

துர்க்கா மந்திர்:

துளசிமானஸ மந்திரின் பக்கத்தில் தான் துர்க்கா மந்திர்.

தொல்பொருட்காட்சி நிலையம்:

கங்கையின் அக்கரையிலுள்ள காசி ராஜா வின் அரண்மனையில் இது நிறுவப்பெற்றுள்ளது. பழைய வரலாற்றுப் பொருட்களை இங்குப் பாது காத்து வைத்துள்ளனர். பரம்பரை உரிமையுடைய ஒரு அரசர் இன்றும் இதற்குள் வசித்து வருகிறார். இங்கும் ஒரு குகைக்கோவில் உள்ளது.

காலை 11 மணிக்கு தரிசனங்கள் முடித்து நேப்பாளம் செல்பவர்கள் மதியம் 12 மணிக்கு காசி விமானநிலையத்தில் சென்று சேரவேண்டும் 1.15 மணி விமானம் புறப்பட்டு 2-25க்கு காட்மண்டு விமானநிலையம் சென்று சேருகிறது. அன்று காட்மண்டு சுற்றி பார்த்தலும் ஓய்வும்.

நேப்பாளம்:

சீனாவுக்கும் பாரதத்துக்கும் பூட்டானுக்கும் இடையே உள்ள எழில் மிக்க சிறிய நாடு. சமீப காலம் வரை இங்கு அரசன் ஆட்சி நடந்து வந்தது. இதன் தலைநகரம் காட்மண்டு இப்-பட்டணம் சுமார் 100 கி மீ சுற்றளவு கொண்டதும் இமய மலையின் உச்சியில் சுற்றும் மலைஉச்சி களால் சுற்றப்பட்டு எந்நேரமும் இளம் குளிர்கால நிலையுடன் சுற்றுலாபயணிகளின் பூலோக சுவர்க்கமாக விளங்குகிறது.

உலகத்தின் ஒரே ஒரு ஹிந்து நாடு. சிவ தலங்களில் காசியை போல் மிக முக்கிய கோவில் தான் இங்குள்ள பசுபதிநாதகோவில் பத்ரிநாத்தில் மஹாவிஷ்ணு எவ்வாறு சிறப்புடன் விளங்கு கிறாரோ அதே போல் சிவபெருமான் சிறப்புடன் விளங்குவது பசுபதிநாத்தில். இங்குள்ள சிற்பக் கலையானது சீனா, பூட்டான் ஜப்பான் முதலிய வெளிநாடுகளுடன் தொடர்புடையதாகும்.

முக்கிய கோவிலாகிய பசுபதிநாத கோவிலி லிருந்து சுமார் 3 கி மீ தொலைவில் ஸ்ரீ பார்வதி தேவியின் திருக்கோவில் உண்டு. இவ்விரண்டு திருக்கோவிலுக்குமிடையே ஏராளமான கோவில் களும், அவ்விடங்களில் 5000 சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதும், உலகில் வேறெங்கும் காணகிடைக்காத காட்சியாகும் இங்கு கோவிலை சுற்றி எண்ணிலடங்கா ருத்திராட்ச கடைகள் உண்டு இந்த பயணத்தில் ருத்திராட்ச மாலை விலை குறைவாக இங்கு வாங்கலாம்.

அரசர்கள் வாழ்ந்து ஆட்சி செய்த அரண் மனைகள் இன்று அருங்காட்சியமாக காட்சி அளிக்கிறது. இங்கு பார்க்கலாம் பழையதும் புதியதுமான இந்த அரண்மனைகள் எழில்மிகு கலை அலங்காரத்துடன் நேப்பாளிகளின் கலைதிறனுக்கு எடுத்துக்காட்டாக தலை திமிர்ந்து நிற்கிறது.

நேப்பாள் யாத்திரைக்கு செல்வோர் iden tificetion-க்காக Identifiction கார்டோரேஷன் கார்டு, ஓட்டுநர் கார்டு; Passport முதலியவை களில் ஏதேனும் ஒன்றின் போட்டோஸ்டாச்சு காப்பியோ உடன் கொண்டு வரவும்,

நேப்பாளில் வாங்கும் வெளிநாட்டு பொருள்களுக்கு Air port-ல் டியூட்டி அடிப்பார்கள் ஆகையினால் பொருள்கள் வாங்கும் பயணிகள் இதை நினைவில் வைக்க வேண்டும்.

போகவர விமானகட்டணம் நபர் ஒன்றுக்கு ரூபாய் 2000–ஏர்போர்ட் டாக்சும் அத்துடன் அங்கு ஆகும் எல்லாவிதமான செலவுகளும் (1 கைடுக்கும் சேர்த்து) பயணிகள் தாங்களே செய்து கொள்ள வேண்டியதாகும்.

நேப்பாளில் தங்குதல், உணவு, ஆகிய செலவுகளும் பயணிகளே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

புனிதபயணம் வருவோர் அவரவர் சொந்த மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து Identification Certificate கண்டிப்பாக வாங்கிவர வேண்டும். தவறினால் ரூபாய் 150 – செலுத்தினால் நாங்கள் ஏஜன்டிடம் வாங்கி தரலாம். பயணி–களிடம் பாஸ்போர்ட் இருந்தால் Identification தேவையில்லை.

ஏதாவது காரணத்தால் விமானப்பயணம் தடைபட்டால் நேரிடும் நட்டங்கள் பயணிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

17–9–'96 செவ்வாய் (10–ம் நாள்)

நேப்பாளம் போகாதவர்கள் காசியில் ஓய்வு. நேப்பாளம் சென்றவர் மாலை 4–00 க்கு காசியில் சென்று ஓய்வு,

18–9–'96 புதன் (11–ம் நாள்)

அதிகாலை 5 மணிக்கு காசியிலிருந்து கிளம்பி அலகபாத் வழி அயோத்தியில் சென்று ஓய்வு.

கங்கை யமுனை ஆகிய நதிகளின் சங்கம ஸ்தாபனமாகிய த்ரிவேணியில் பலி கர்மாதிகள் நடத்தலாம். இரண்டு நதிகளும் சேருமிடத்திற்கு வள்ளத்தில் போகவேண்டும். அசோக சக்கர வர்த்தியின் காலத்தில் நிறுவிய ஒரு கோட்டை இதனருகாமையில் உண்டு. இன்று இங்கே போர்கருவிகள் செய்யும் தொழிற்சாலை உள்ளது மேலும் இங்கு ஒரு குகைகோயிலுமுண்டு. மோத்திலால் நேருவின் 'ஆனந்தபவன்' இவ்விடத்தில் இருக்கிறது.

19–9–'96 வியாழன் (12–ாம் நாள்)

அயோத்தியாவிலுள்ள புண்ணியத்தலங்கள் பார்த்து அங்கேயே இரவு தங்கல்.

அயோத்தியா

சரயூ நதியில் நீராடி அயோத்தி ஆலயங்களை தரிசித்தல்.

திரேதாயுகத்தில் அவதரித்த ஸ்ரீ ராம சந்திரரின் வாழ்க்கை வரலாற்றை வெளிப்படுத்தும் எண்ணற்ற பழையநிலையங்கள் அயோத்தி யிலுள்ளன. தசரதனின் அரண்மனை புத்திர காமேஷ்டி யாகம் நடந்த இடம் திருமணமான பிறகு சீதாதேவி தங்கி சமையல் செய்த இடம் கைகேகியியின் கோபாலயம் மட்டுமல்ல. ஸ்ரீ ராமாயணத்துடன் தொடர்புள்ள பல நிகழ்ச்சி களுடன் தொடர்புடைய பற்பல இடங்களையும் அயோத்தியில் காணலாம்.

ஸ்ரீ ராமஜென்மபூமி

பாரதத்தில் மிகப்பெரிய ஆலயம் இருந்தது ஸ்ரீராமஜென்ம பூமியிலாகும். மாற்றாரின் படை எடுப்பினால் இவ்வாலயம் தகர்க்கப்பெற்றது. சமீபத்தில் வாதவிஷயமான இந்த இடம் தற்போது இந்துக்களின் வழிபாட்டுதலமாக இருக்கிறது. ஸ்ரீராமன், சீதை, லட்சுமணன், அனுமன் ஆகியோரின் அழகிய சிலைகள் பார்த்துப் புண்ணியம் பெறுவதற்கு இந்தியாவில் பல திசைகளிலிருந்தும் பக்தர்கள் தற்போது ராமஜென்ம பூமிக்கு தீர்த்த யாத்திரையாக வந்து போகின்றனர்.

வால்மீகி மந்திர்

கண் கவரும் இருமாடி கட்டிடம் குசலவர்களுடன் வால்மீகீ மகரிஷி நிற்கும் சிலைதான் இங்கு பிரதிஷ்டிக்கப் பெற்றுள்ளது. சுவர்களில் முழுவதும் இராமாயண நிகழ்ச்சிகளின் சித்திரங்கள் செதுக்கப்பெற்றுள்ளன.

கோபாலயம்

ஒரு பழைய மண்டபம். கைகேயி தங்கி இருந்த இடம். ஸ்ரீராமர் முடிசூட்டுவிழாவைத் தடை செய்து பரதனுக்கு முடிசூட்டுவதற்காக தசரதனை தூண்டுவதற்காக கைகேயி அழுது உருண்டு கிடந்த இடம்.

ஆஞ்சநேயர் ஆலயம்

பக்த அனுமனின் அருள் ஒளிவீசுகின்ற அழகிய ஆலயம். ஸ்ரீ ராமர் கோவிலைப் போன்று இதற்கும் இங்கு சிறப்பு உண்டு.

அயோத்யா நகரிலுள்ள மற்றும் பல புண்ணியத் தலங்களையும் தரிசித்தல்

20–9–96, வெள்ளி (13–ம் நாள்)

காலை 4 மணிக்கு அயோத்தியிலிருந்து கிளம்பி இரவு 8 மணிக்கு மதுரா சென்று ஓய்வு.

21–9–'96 சனி (14–ம் நாள்)

மதுராவைச் சுற்றியுள்ள கோவர்த்தனம், பிருந்தாவனம், முதலியன தரிசித்த பின் ஆக்ரா தாஜ்மஹால், ஆகியவை பார்த்து மதுராவில் ஓய்வு.

கோவர்த்தனம்

ஸ்ரீ கிருஷ்ணபகவான் குடையாக பிடித்த குன்று. அழகிய குன்றின்மேல் ஸ்ரீ கிருஷ்ணர் ஆலயம் பார்க்கத் தகுந்ததாகும்.

பிருந்தாவனம்

ஸ்ரீ கிருஷ்ணன் கோபியர்களுடன் விளையாடிய புண்ணிய பூமி ராசக்கிரீடை நடந்தது இங்கு தான். இங்கு இப்போது காணப்படும். மரஞ்செடி, கொடிகள் மிகவும் பழமை, ஸ்ரீ கிருஷ்ணன் தனது புல்லாங்குழலை ஊன்றிய இடத்தில் தற்போது சிறியதோர் குளமுண்டு. கண்ணன் மண்ணைதின்ற இடமும் இங்குதான் இங்குள்ள மண்ணைப் பிரசாதமாக பக்தர்கள் கொண்டு செல்கிறார்கள்.

காளியமர்த்தனத்தை நினைவு படுத்தும் கடம்பு மரமும், கோவில்களும் இப்போதும் இங்கே காணலாம். பக்த மீராவினுடையவும் ஹரிதாஸ் சுவாமிகளுடையவும் நினைவு ஆலயங்கள் இங்குண்டு.

பிருந்தாவனத்தில் பல இடங்களில் அகண்டநாம ஜபவோசை எப்போதும் கேட்ட வண்ணமிருக்கும். பசுபரிபாலனச் சாலைகளும் அனாதை இல்லங்களும், ஆசிரமங்களும் ஏரான மாக பிருந்தாவனத்திலுண்டு.

இங்கு கோவிந்தராஜர் கோயிலுள்ளது முன் காலத்தில் இதற்குஐந்துமாடிகள் இருந்ததாகக் கூறுவர். தற்போது இரண்டு மாடிகளே உள்ளன. யமுனை கரையிலுள்ள இந்தக் கோவிலின் மிக உன்னதமான இடத்திலுள்ள தீப ஒளியைக் கண்ட அக்பர் சக்கரவர்த்தி மனம் பெறாது மேலேயுள்ள மூன்று மாடி களையும் இடித்துத் தள்ளினான்.

மதுரை

ஸ்ரீ கிருஷ்ண பகவானது ஜன்மபூமி கம்ஸனது கோட்டையும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் திரு அவதாரம் செய்த சிறைகூடமும் இன்றும் பாதுகாக்கப்படுகின்றன. இதற்கருகாமையிலேயே ஸ்ரீ ஜித்பிர்லாஜி கட்டிய ஸ்ரீ கிருஷ்ணர்கோவிலும் உள்ளது. இக்கோவிலுள்ளே ராதாகிருஷ்ண மூர்த்திகள் புன்முறுவலுடன் திகழ்கிறார்கள். ஹனுமானுடையவும் மற்றும் பல தேவர்களுடைய வும் சிலைகள் இங்கு வழிபடத் பெறுகின்றன.

மது என்ற அரக்கன் இந்நகரத்தை நிறுவினான் என உத்தர ராமாயணம் கூறுகிறது மதுவின் மகனான லவணாசுரனை கொன்று சத்ருக்கனன் இந்நகரை அதீனப் படுத்தினான் பின்னர் மகாபாரத காலத்தில் சூரசேனனது குலத்தவர் இங்கே அரசு செய்தனர் சூரசேன குலத்தில் ஒரு கிளையில் தான் பகவான்

ஸ்ரீ கிருஷ்ணர் அவதரித்தது. மதுரா நகரத்திற்கு சூரசேனபுரம் என மஹாபாரதம் கூறுகிறது. கம்சன் மதுரையை ஆண்ட போது ஆந்திரர்களான மல்லனையும் சாணூரனையும் பின்னர் கம்சனையும் பகவான் கொன்றொடுக்கியது இங்குதான்.

அசோகர் இந்நகரை ஒரு பௌத்த நகரமாக மாற்றினார். பின் மௌரியர், யவனர், சகர் முதலியோர் இங்கு அரசு செய்தனர். கி.பி. 1017–ல் முகமது கஜனி இந்நகரத்தைத் தகர்த்தான். அதைத் தொடர்ந்து இந்நகரம் பாழ்பட்டது.

ஆக்ராக்கோட்டை

யமுனையின் கரையில் அக்பர் இக்கோட்டையை கட்டினார். இதனுள்ளே அழகிய அரண்மனைகளும், பள்ளிவாசல்களுமுள்ளன. ஜஹாங்கீர், ஷாஜகான், ஆகிய பேரரசர்கள் இங்கே வாழ்ந்திருந்தனர், நவரத்தினங்களும், தங்கத்தகடுகளும் பதித்திருந்த ஷாஜகானது அரண்மனை இன்று நவரத்தினங்களையும் தங்கத்தையும் இழந்து பாழாகி கிடப்பதை பார்க்கலாம். ஆங்கில கொள்ளையர்களுடைய கைவரிசை அங்கே காணலாம். சிவாஜியை மொகலாயர்கள் சிறைபடுத்தியதும் இந்த ஆக்ரா கோட்டையில் தான்.

தாஜ்மஹால்

3653–ல் மும்தாஜ் ராணியின் நினைவாக ஷாஜகான் நிறுவியது.

22–9–'96 ஞாயிறு (15–ம் நாள்)

மதுராவிலிருந்து காலை 6 மணிக்கு புறப்பட்டு டெல்லியில் சுற்றிபார்த்தபின் ஓய்வு.

டெல்லி காட்சிகள்.

காலை முதல் சுற்றுலா ஆரம்பம். பிர்லா மந்திர், குதுப்மினார், தீன்மூர்த்திபவன் இந்தியகேட், பார்லிமெண்டரி கட்டிடம், பிர்லா பவன், இந்திராகாந்தி மியூசியம், ராஜ்காட் சாந்தி வனம், செங்கோட்டை ஆகியவை பார்த்து மாலையில் ஹரித்வார் சென்று ஓய்வு.

பிர்லா மந்திர்

மார்பிளினால் செய்யப்பட்ட அழகான பேராலயம் இது. ஸ்ரீ J.K. பிர்லாஜி தான் இதைக் கட்டியவர். கோயிலின் முக்கிய மூர்த்தி லக்ஷ்மி நாராயணன். இதன் இடது பக்கம் சிவலிங்க பிரதிஷ்டை, வலது பக்கத்தில் துர்க்காதேவி ஒரு கண்ணாடி அறையில் முரளீ கிருஷ்ணமூர்த்தியின் சிலைஉள்ளது. எந்த பக்கத்திலிருந்து பார்த்தாலும் கண்ணுக்கு விருந்தாக அது மிளிர்கிறது.

குதுப்மினார்

பதிமூன்றாம் நூற்றாண்டில் நிறுவப் பெற்றதும் இன்றய இந்தியாவில் உள்ள மிக உயர்ந்ததுமாகிய ஸ்தூபி, ஐந்துமாடிகளும் 379 படிகளும் உள்ள இந்த ஸ்தூபியின் உயரம் 236 அடி 8 இஞ்ச்.

தீன்மூர்த்தி பவன்

ஜவகர்லால்நேரு தங்கியிருந்த மாளிகை இப்போது நேரு மியூசியமாக பயன்படுத்தி வருகிறார்கள்.

இந்தியாகேட்

ஒன்றாவது உலகப்பெரும் போரில் கொலையுண்ட தொண்ணூறாயிரம் (90,000) இந்தியப்படை வீரர்களின் நினைவாக நிறுவப் பெற்ற வளைவு ஆகும்.

பார்லி மெண்டரி கூட்டிடம்

171 மீட்டர் விட்டத்தில், வட்டமாக நிறுவப்பெற்ற அழகிய மண்டபம்.

பிர்லா பவன்

இங்குதான் காந்தியடிகள் கடைசி காலத் தில் வாழ்ந்ததும், சுட்டு வீழ்த்தப்பட்டதும், காந்திஜியின் வாழ்வை விளக்கும் பொருட்காட்சி சாலையாக இது இருக்கிறது.

இந்திராகாந்தி மியூசியம்

இந்திராகாந்தி வாழ்ந்ருருந்த பவனம் இந்திரா காந்தி இறந்ததும் இங்கே தான். இன்று இது தேசிய மியூசியமாக இருக்கிறது

ராஜ்காட்

மகாத்மா காந்தியின் சமாதி ஸ்தானம் கறுத்த சலவைக்கல்லால் சதுரமாக கட்டப்பெற்ற ஒருபீடமும் அதைச்சுற்றி ஒரு பூந்தோட்டமும் இங்கே உள்ளது.

சாந்திவனம்

ஜவகர்லால் நேருவின் சமாதி இடம்.

செங்கோட்டை

சிவந்த கற்களை கொண்டு கட்டப்பெற்ற மனோகரமான கோட்டை 1938-ம் ஆண்டு யமுனா நதிக்கரையில் கட்டப்பெற்ற இந்த கோட்டைக்கு இரண்டு கி.மீ. சுற்றளவு உண்டு

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த செங்கோட்டையில் தான் இந்திய பிரதமர்கள் சுதந்திர தினத்தன்று அறிவுரை வழங்குவது கோட்டையினுள் மொகலாய பேரரசர்களின் அனேக அரண்மனைகள் உண்டு.

23–9–'96 திங்கள் (16–ம் நாள்)

டெல்லியிலிருந்து புறப்பட்டு ஹரித்வார் சென்று ஓய்வு.

24–9–96' செவ்வாய் (17-ம் நாள்)

ஹரித்வாரிலுள்ள திருக்கோவில்கள் தரிசனம். அன்றிரவு அங்கே தங்கல்.

ஹரித்வார்

இமயமலைக்கு வாயிலாய் திகழ்வது ஹரித்வார் பகவான் ஹரி நரநாராயணர்களாக அவதாரம் பண்ணி தவம் செய்ய பத்திரிக்கு சென்றது இங்கிருந்துதான் எனவும். அது வரையிலும் மாயாபுரி என்று அழைக்கப்பெற்றிருந்த அவ்விடம். அக்காலம் முதல் ஹரித்வார் என்ற பெயரில் அழைக்கப் பெற்றதென்றும் கூறுவர். புராணங்களில் மாயாபுரி என்று கூறப்படும் தலம் அல்லது நகரம் இதுவே.

உலகின் முதன்முதலாக பாகவத ஸப்தாஹம் நடந்த இடம் இது. சுவேதகேது மகாராஜா பிரம்மனை தவம் புரிந்து தரிசனம் செய்த இடம் இது தட்சபிரஜாபதியை வதைத்த பின் சங்கார தாண்டவம் நடத்திய சிவபெருமானை பக்தர்கள் துதிப்பாடல்கள் பாடி சாந்தி அடையச் செய்து பக்தர்களின் விருப்பத்திற்கிணங்க சிவபிரான் காட்சி கொடுத்ததும் இவ்விடமே எனக்கூறுவர் அங்ஙனம் இந்தபுண்ணிய

மண்ணிற்கு சிவபுரி என்ற பெயர் கிடைத்தது பிரம்மா, விஷ்ணு, மகேசுவரர்களின் திருப்பாதங்கள் பட்ட தெய்வதலமாகும் ஹரித்வார் கங்காநதி மலைப்பகுதியை விடுத்து அமைதியாக சமவெளியை அடைவது ஹரித்வாரில் தான்இங்கு பற்பல ஆசிரமங்களும், சத்திரம்சாவடிகளும்உள்ளன நீராடும் படித்துறைகள் பலவும் உள்ளன.12 ஆண்டுகளுக்கொரு தடவை இங்கே கும்பமேளா நடக்கிறது அவ்வேளை பல லட்சம் மக்கள் தீர்த்த நீராடுவதற்காக கூடுவர்.

இங்கு ஒரு ஐயப்பன் ஆலயமிருக்கிறது ஹரித்வாருக்கு வெளிநாடுகளிலிருந்தும் பக்தர்கள் வந்து போகிறார்கள்.

ராம்தாம் தர்மசாலா

இது கங்கைக்கரையிலுள்ள தூய்மையான ஓராசிரமம். இங்கு தீர்த்தயாத்திரிகளான தாய்மார்களைக் கூட்டிவைத்து திருவிளக்கு பூஜை நடைபெறும்.

பிரம்மகுண்டு

மனிதனின் வீடுபேற்றிற்காக கங்காநதியில் பிரம்மதேவன் அமிர்தம் பொழிந்த இடம் இது. நீராடுதல், பாத்திரங்களில் தீர்த்த ஜலம் நிறைத்தல் முதலியன இங்கு நடைபெறும். இங்குள்ள கங்காதேவி கோவிலில் கற்பூர ஆராதி கழிந்த உடன் கங்கா நதியையும் பெரிய அளவில் கற்பூர ஆராதி எடுத்து பூஜை செய்வர். இது இங்கல்லாமல் வேறெங்கும் இல்லை

மாலை வேளையில் பக்தர்கள் இலைத் தொன்னைகளில் மலர்களும் சிறுதீபங்களும் வைத்து கங்கா நதியில் ஒழுகவிடுவது கண்கொள்ளாததோர் தீபகாட்சியபகும்.

மானஸா தேவிகோவில்

'சிவாலி பஹாட்' என்றழைக்கப்படும் மலை மேலுள்ள இக்கோவில் மிக எளிதாக 'ரோப்வே' வழி இங்கே சென்று சேரலாம். சிவன், துர்க்கை மூர்த்திகளின் கோவில் குன்றிலிருந்து காணும் இயற்கைக் காட்சி மிகவும் அற்புதம்.

ஸப்த ஸரோவரம்

கங்கா நதி ஏழு கிளைகளாக பிரிந்து ஒழுகுகின்ற இடம் இது. ஸப்தரிஷிகள் (7 பேர்) தவஞ்செய்திருந்த ஆசிரமங்களின் அருகாமை வழி மகரிஷிமார்கள் விருப்பத்திற்கிணங்க கங்கை ஆறு ஏழாக பிரிந்து ஒழுகியது கொஞ்சதூரம் சென்றபின் அவைகள் ஒன்றாக கூடுகின்றன. அந்த ஸப்தஸரோவரக் காட்சியை இப்போதும் அங்கே காணலாம்.

கங்கல்

பிரம்ம புத்திரனாகிய தக்ஷப்ரஜாபதியின் தலைநகர் கங்கல் என்ற இடத்திலிருந்து தக்ஷனின் மகளாகிய சதீ தனது தந்தையின் வெறுப்பினால் மனம் நொந்து யோகாக்னியில் தன்னைத்தானே எரித்துக்கொண்டது கங்கலில் த்தான் மனைவியான சதியின் முடிவை அறிந்த சிவபெருமான் சங்கார தாண்டவம் நடத்தியதும் இங்கு தான் எனக்கூறுவர்.

துறவிகளின் உடலை ஜலசமாதி செய்வதும் இங்குதான் சற்குருதேவர் அபேதானந்தமஹராஜ் இங்கே தான் ஜலசமாதி கொண்டார் (இந்த யாத்திரையில் கலந்து கொள்பவர் இங்கு நடைபெறும் அர்ச்சனை அகண்டநாம ஜெபம் ஆகியவைகளில் பங்கு கொண்டு இங்கு சமாதி அடைந்த புண்ணியாத்மாக்களுக்கு அஞ்சலி செய்யுமாறு வேண்டுகிறோம்.

25-9-'96 புதன் (18ம் நாள்)

காலை 6 மணிக்கு ஹரித்வாரிலிருந்து புறப்பட்டு ரிஷீகேசம் சென்று சேர்தல். ரிஷீகேசம், பாரத்மாதா கோவில், சப்தர்ஷி ஆசிரமம், முதலியவை பார்த்து ஹரித்வார் சென்று ஓய்வு.

ரிஷீகேசம்

ரிஷீகேசம் இமயமலை சாரலிலுள்ள மிகப்பழமையான புண்ணியத்தலம் அத்ரி அங்கிரஸ் முதலிய பல மாமுனிவர்களின் பாததுளியால் பரிசுத்தமான இடம்.

ரிஷி முனிவர்களின் தவச்சாலையான இத்தலத்தில் தற்காலத்திலும் பல தவயோதிகள் தவஞ்செய்து வருகிறார்கள். ஏராளம் அன்ன சத்திரங்கள் இங்குள்ளன. அவைகளில் துறவிகளுக்கு அன்னதானமும் தங்குமிடமும் அளிக்கின்றார்கள்.

சிவானந்தாசிரமம்

கங்கை நதிக்கரையில் 1946-ல் சுவாமி சிவானந்தசரசுவதி நிறுவியது அகில உலக புகழ்பெற்ற தியான யோக நிலையமாக இன்று இது விளங்குகிறது. இந்த ஆசிரமத்திற்கு உத்தமர்களான பல துறவிப்பெரியோர்களை உருவாக்க முடிந்தது. உலகப்புகழ் கொண்ட ஞானானந்த சரஸ்வதி, சின்மயானந்த சரஸ்வதி விஷ்ணுதேவானந்தசுவாமி (பறக்கும் சுவாமி) ஆகியோர் சுவாமி சிவானந்த சரசுவதியின் சீடர்களாவார்.

திருநெல்வேலியில் பத்துமடை ஊரில் பிறந்தவர் சிவானந்தசரசுவதி அவர் ரிஷீகேசத்தில் சமாதி அடைந்தார். அவரது சமாதி கோவிலில் தினமும் பஜனை நடந்து வருகின்றன.

தயானந்தாசிரமம்

தயானந்த சரஸ்வதி சுவாமி நிறுவிய ஆசிரமம் இது, நான்குமாடி உள்ள இந்த கட்டிடத்தின் மிக உயர்ந்த மாடியில் சுவாமி அபேதானந்தரின் திரு உருவப்படம் வைக்கப்பட்டு அகண்ட நாம ஜெபமும் நடைபெறுகிறது.

சொர்க்காஸ்ரமம்

சிவானந்தாசிரமத்தின் நேர் எதிராக கங்கைக்கரையில் உள்ள ஓர் ஆசிரமம் இது. சிவானந்தாசிரமத்திலிருந்து மறுகரை செல்வதற்காக 'சிவானந்தாபிரிட்ஜ்' என்ற ஓர் தூக்கு பாலம் இப்பொழுது அமைத்துள்ளனர்.

காளி கம்ளிவாலா க்ஷேத்திரம்

சுவாமி காளி கம்ளிவாலா என்று புகழ் பெற்ற சுவாமி விசுத்தானந்தர் என்ற மகான் இந்த அன்ன சத்திரத்தை நிறுவினார். எப்போதும் ஓர் கடுமையான கம்பிளி போர்த்திக் கொண்டு இவர் நடமாடியதால் இவருக்கு காளி கம்ளிவாலா என்று பெயர் ஏற்பட்டது. தீர்த்த யாத்திரிகளின் தொண்டனாகவும், பாது காவலனாகவும் இந்த மகான் செயல்பட்டு வந்தார். யாத்திரை வசதியும் ஜாகை வசதியும் குறைவாக இருந்த முற்காலத்தில் இந்த சத்திரத்தில்

இலவசமாக தீர்த்த யாத்திரிகள் தங்கியிருந்தார் கள். ஏழைகளான யாத்திரிகளுக்கு கம்பிளி முதலானவைகள் கொடுத்தார். ரிஷீகேசத்தில் மட்டுமல்ல இமயமலையின் பல இடங்களில் காளிகம்ளிவாலா சத்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. அவரது சமாதிக்கு பிறகு எல்லர சத்திரங்களையும் ஒன்று சேர்த்து காளிகம்ளிவாலா டிரஸ்ட் உண்டு பண்ணியுள்ளனர். இன்று அதற்கு கோடிகணக்கான ஆஸ்தி இருக்கிறது. இந்த டிரஸ்டிலிருந்து சத்திரங்கள், மருத்துவமனை கள் முதலியன நன்றாக செயல்பட்டு வருகின்றன தினமும் நூற்றுகணக்கான துறவிகளுக்கு காளிகம்ளிவாலா ஆசிரமத்திலிருந்து இலவச உணவு அளிக்கப்படுகிறது.

பரமார்த்தபவன்

தேவிதேவர்களுடைய அழகிய சிலைகளும் ரிஷிமுனிவர்களின் திரு உருவங்கள் அமைக்கப் பட்டுள்ள ஓர் அழகிய நிலையம் இது. அனந்த சயனம், லெட்சுமி நாராயணர், ஐந்துமுகசிவன் கணபதி, சரஸ்வதி, துர்க்கை, விராட்புருஷன், வெங்கடாசலபதி,கபிலர், நாரதர், முதலியோர்களது சிலைகள் அற்புதமாக இருக்கின்றன. பார்வதி சிவனை நோக்கித்தவம் செய்வது, சாவித்திரி எமதர்மனிடம் சத்தியவான் உயிரைக் கேட்டு வாங்குவது நரசிம்மமூர்த்தி இரணியகசிபுவை மடியில் கிடத்தி குடலை பிடுங்குவது அனுசுயா தேவி மும்மூர்த்திகளைக் குழந்தைகளாக மாற்றி பால் கொடுப்பது, சபரிமோட்சம், முதலிய கலை வடிவங்களும் காணத் தக்கவையாகும்.

கீதாபவன்

கீதை உபதேசம் முழுவதும் கலைத்திறன் வாய்ந்த சிற்ப வடிவங்களாக விளங்கியிருக்கும் புண்ணியக் கோவில் பாகவதக்கதைகளும் சித்திரங்களாக்கப் பெற்றுள்ளன.

பாரதமாதா க்ஷேத்திரம்

180 அடி உயரத்தில் 8 மாடிகளாகப் கட்டப் பெற்றுள்ள ஓரழகிய மண்டபம். பாரதமாதாவின் ஒரு அழகிய சிலை இங்கு நிறுவப் பெற்றுள்ளது. ஒவ்வொரு மாடியிலும் பாரதீய ஆச்சாரியர்களுடையவும், துறவிகளுடையவும் சிலைகள் வைக்கப்பெற்றுள்ளன. ஒவ்வொரு மாடிக்கும் ஒவ்வொரு தனிப்பெயர் சூட்டப் பெற்றுள்ளது.

சுவாமி சத்யமித்திரானந்தகிரி மஹராஜ் தான் இதை நிர்மித்தவர் சலவைக்கற்களால் கட்டப் பெற்றுள்ள இக்கோயிலை 1983, மே 13–ாம் தேதி திருமதி இந்திராகாந்தி திறந்து வைத்தார்.

ஸப்தர்ஷி ஆசிரமம்

ஒரு சிவாலயம், அதைச்சுற்றி அழகிய மண்டபம் மண்டபத்தில், ஜமதக்னி, பரத்வாஜன் கௌதமன், கசியபவன் அத்ரி, வசிஷ்டன் விசுவாமித்திரன் ஆகிய ஸப்தர்ஷிகளின் சிலைகள் நிறுவப்பெற்றுள்ளன. ஸப்தர்ஷிகள் முன்னாளில் செய்த வேள்வியின் தீ இன்றும் எரிந்து கொண்டிருக்கிறது.

ரத்னாகரன் என்ற கொள்ளைக்காரனுக்கு ஸப்தர்ஷிகள் உபதேசம் செய்து ஆன்மஞானம் அளித்ததும் அக்கொள்ளைக்காரன் ராம நாம ஜெப மகிமையால் வால்மீகிமகரிஷி ஆனதும் இவ்விடத்தில் தான்,

26-9-'96 வியாழன் (19-ம் நாள்)

ஹரித்வார் ஓய்வு.

27-9-'96 வெள்ளி (20-ம் நாள்)

காலை 5 மணிக்கு ஹரித்வாரத்திலிருந்து புறப்படுதல். தேவப்ரயாக், ஸ்ரீ நகர், குப்தகாசி, ருத்திரப்ரயாகை வழி ராம்பூரில் சென்று சேர்தல்.

தேவப்பிரயாக்

கங்கை நதியின் உபநதிகளாகிய அளகானந்தையும் பாகீரதியும் ஒன்று சேர்கின்ற இடம்.

ஸ்ரீநகர்

இமயமலை யாத்திரை செல்வோர் ஓய்வுக்காக தங்கிச்செல்லும் இடம்.

உத்திரபிரயாகை

பத்திரிநாத்திலிருந்து வரும் அளகானந்தையும் கேதாரநாத்திலிருந்து வரும் மந்தாகினியும் ஒன்றுகலக்குமிடம். ருத்ரபகவான் தவஞ்செய்த இடம் இங்கொரு சிவாலயமுமுள்ளது. துர்க்காதேவி கோவிலுமுண்டு.

மந்தாகினியின் கரை வழியாக கேதார்நாதத்திற்கும் அளகானந்தையின் கரைவழியாக பத்ரீநாதத்திற்கும் உள்ள பாதைகள் இங்கிருந்து பிரிந்து செல்கின்றன.

குப்தகாசி

1479 மீட்டர் உயரத்திலுள்ள ஒரு கிராமம் குருக்ஷேத்திரப் போருக்குப் பிறகு பாண்டவர்கள் காசி விசுவநாதரைப் தரிசிக்கச் சென்ற போது, அவர் பாண்டவர்களுக்குக் காட்சிக் கொடுக்க மனமின்றி மறைந்திருந்த இடமென இதனை கூறுகின்றனர்.

ராம்பூர்

கேதார்நாத்திற்கு போவோரும் போய்த் திரும்புவோரும் இரவு தங்குமிடம்.

28–9–'96 சனி (21–ம் நாள்)

அதிகாலை 5 மணிக்கு ராம்பூரிலிருந்து கிளம்பி கௌரிகுண்டு வழி கேதார்நாத்தை யடைந்து தரிசித்துவிட்டு திரும்பி மாலை 6 மணிக்கு ராம்பூருக்கு வருகிறார்கள்.

கௌரிகுண்ட்

கேதார்நாத் சிகரத்தின் அடிவாரத்தில் இயற்கையாகத் தோன்றியுள்ள வெந்நீர் ஊற்றுள்ள இடம் கந்தகம் கலந்த இந்த வெந்நீரில் குளிப்பது யாத்திரிகளுக்கு மிகுந்த பயன் தருவதாகும்.

கேதார்நாத்

12000 அடி உயரமுள்ள கேதார்நாத்தில் சென்று சேர்வது சிறிய கஷ்டமாகும். கௌரி குண்டிலிருந்து 14 கி.மீ. நடந்து அல்லது குதிரை சவாரி செய்து மட்டுமே கேதார்நாதத்திற்குச் செல்ல முடியும் டோளியில் (தொட்டில் போன்றது) உட்கார்ந்து செல்லலாம்.

பனி மூடிய சிகரங்களால் சூழப்பெற்றதும் விண்ணுலகக் காட்சியைத் தந்து கொண்டிருப்பது மான கேதார்நாத் தரிசனம் பேரின்பத்தை அளிப்பதாம்.

கேதார்நாத் சிவலிங்கம் சுயம்புவாகும் பஞ்சபாண்டவர்களால் வழிபடப் பெற்றது. காசியைப்போல் இங்கும் எல்லோரும் மூர்த்தியைத் தொட்டு பூஜைகள் செய்யலாம்.

ஜகத்குரு ஆதிசங்கராச்சாரியாருடைய மகா சமாதி இங்கே தான் என்று கூறப்படுகிறது அவர்கள் நினைவாக ஒரு கோவில் இங்கே உள்ளது.

29–9–'96 ஞாயிறு (22–ம் நாள்)

அதிகாலை 5 மணிக்கு ராம்பூரிலிருந்து பத்ரிநாதத்திற்குத் திரும்புதல், ருத்ரப்பிரயாகை வழி கர்ணப்பிரயாகை, நந்தபிரயாகை, சாமோலி பீப்பல்கோட், விஷ்ணுப்பிரயாகை, பாண்டுகேசுவர் என்ற இடங்களை கடந்து மாலை 6 மணிக்கு பத்ரிநாதம் சேர்தல் ஓய்வு.

30–9–'96 திங்கள் (23–ம் நாள்)

பத்ரிநாதம் தரிசனம் இவ்வாலயம் பாரதத்தின் வடகோடி எல்லைப் புறத்திலிருப்பதாம் இங்கிருந்து 30 கி மீ வடக்கே பாரதத்தின் எல்லைக்கோடு உள்ளது இது பண்டைக்காலம் முதற்கொண்டே எண்ணற்ற யோகிகளும், முனிவர்களும் வாழும் தபோபூமியாகும்.

வியாஸகுகை

பத்ரிநாதன் கோவிலுக்கு வடக்கே 6 கி மீ தொலைவிலுள்ள வியாசகுகையில் வாழ்ந்து கொண்டு வேதவியாஸ பகவான் மகாபாரதம் முதலிய நூல்களை எழுதியதாகக் கூறுவர்.

பாண்டவர்கள் சொர்க்காரோகணம் செய்வதும் இங்கேதான். நர நாராயணரிஷிகளால் இவ்விடம் பாதுகாக்கப்படுகிறது அவர்கள் பெயரில் ஆலயத்தின் இருபுறமும் நரபர்வதம் நாராயண பர்வதமுமாக இரண்டு மலைகள் உள்ளன.

ஆதிசங்கரர் சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன் இக்கோவிலை புனர்பிரதிஷ்டை பண்ணி கேரளத்திலுள்ள நம்பூதிரிமார்களை இங்கு பூஜாரிகளாக்கினார் அவர்களின் பரம்பரையினர் தான் தற்போதும் இவ்வாலயத்தில் பூஜை செய்பவர்கள் தலைமைப் பூஜாரி ராவல்ஜி என்றழைக்கப்படுகிறார்.

இக்கோவிலுக்கு அருகாமையில் உஷ்ண ஜல ஊற்று பூமிக்குள்ளிருந்து மிக வேகமாக ஊறி ஓடுகிறது. அதனை மூன்று குண்டுகளில் தேக்கி வைத்துள்ளனர் அவைகளுக்கு தப்த குண்டம் என்று பெயர்.

''பூலோக வைகுண்டம்'' எனப்படும் பத்ரி நாதத்தில்தான் கண்ணபிரானது ஆணைக்கிணங்க உத்தவர் இறுதிநாட்களில் தவஞ் செய்திருந்தார். இங்கே தங்கி தவஞ்செய்வோர் முக்தி அடைவது உறுதி கேரள முறையில் இங்கேயுள்ள பூஜைகள் நடைபெறுகின்றன.

இங்குள்ள கங்கைகரையில் பலி தர்ப்பணாதிகள் நடத்துவதால் 21 தலைமுறைகளிலுள்ள பித்ருக்களும் முக்தி அடைவர் என நம்பப்படுகிறது பத்ரிநாத கோவிலில் வைத்து பெண்கள் மட்டும் கலந்து கொள்ளும் திருவிளக்கு பூஜை நடைபெறும்.

1-10-'96 செவ்வாய் 24-ம் நாள்

அதிகாலை 6 மணிக்கு பத்ரிநாதத்திலிருந்து புறப்பட்டு ஜோதிர்மடம் வழி ஸ்ரீநகரை அடைந்து ஓய்வு. வருகிற வழியிலுள்ள ஆஞ்சநேயர் ஆலயத்திலிறங்கி தரிசனம் செய்தல். இவ்வாலயத்தின் அருகாமையில் தான் முற்காலத்தில் சௌகந்திக (பாரிஜாதம்) பூவைதேடிச்சென்ற பீமனை அனுமான் தடுத்து பல பரீட்சை நடத்தினார் எனக்கூறுவர்.

ஜோதிர்மடம்

பகவான் ஆதிசங்கரர் நிறுவிய முதல் மடம் இது. துர்க்கா ஆலயமும் இங்குள்ளன ஸ்ரீ பத்ரிநாதர் ஆலயம் பனிக்கட்டியால் மூடப்படும் போது அங்குள்ள பூஜை இந்த நரசிம்மர் ஆலயத்தில் நடைபெறுகிறது.

2-10-'96 புதன் 25-ம் நாள்

காலை 6 மணிக்கு ஸ்ரீநகரிலிருந்து புறப்படுதல். வழியில் வசிஷ்டகுகை தரிசனம் பண்ணி மாலை டெல்லி வந்து ஓய்வு.

3-10-'96 வியாழன் 26-ம் நாள்

மதியம் 11 மணிக்கு திருவனந்தபுரத்திற்குள்ள K.K. எக்ஸ்பிரஸில் திரும்பி வருதல்.

4-10-'96 வெள்ளி 27-ம் நாள்

ரயில் பயணம்

5-10-'96 சனி 28ம்- நாள்

மாலை 4-30-க்கு ரயில்வழி திருவனந்தபுரம் வந்து சேர்தல்.

காசி ஹிமாலயா தீர்த்தயாத்திரை முற்று பெறுகிறது.

சுபம்.

சதுர்தாம தீர்த்த யாத்திரை

யாத்திரையின் நிகழ்ச்சி நிரல்

18–9–'96 புதன் (முதல் நாள்)
காலை 9–40 க்கு K. K. Express–ல் திருவனந்தபுரத்திலிருந்து ரயில்வழி உத்தரமதுரைக்குப் புறப்படுதல்.

19–9–'96 வியாழன் (இரண்டாம் நாள்) ரயிலில்

20–9–'96 வெள்ளி (மூன்றாம் நாள்)
மதியம் 2 மணிக்கு உத்தரமதுரை சேர்ந்து ஓய்வு. பின் காசி–ஹிமாலய பயணிகளுடன் சேர்ந்து யாத்திரை ஆரம்பம்.

21–9–'96 சனி (நான்காம் நாள்)
மதுரா பிருந்தாவனம், கோவர்த்தனம், ஆக்ரா சுற்றி பார்த்து மதுரா தங்கல்

22–9–'96 ஞாயிறு (ஐந்தாம் நாள்)
காலை 6 மணிக்கு புறப்பட்டு டெல்லி சுற்றிபார்த்து டெல்லிதங்கல்

23–9–'96 திங்கள் (ஆறாம் நாள்)
டெல்லியிலிருந்து புறப்பட்டு ஹரித்–வார் சென்று ஓய்வு.

24–9–'96 செவ்வாய் [ஏழாம் நாள்]
ஹரித்வார் ஓய்வும் சுற்றி பார்த்தலும்

25–9–'96 புதன் (எட்டாம் நாள்)
காலை 6 மணிக்கு ஹரித்–வாரிலிருந்து புறப்பட்டு ரிஷிகேசம் பார்த்து இரவு ஹரித்வார் தங்கல்

26–9–'96 வியாழன் [9–ம் நாள்]
ஹரித்துவாரில் ஓய்வு.

27–9–'96 வெள்ளி [10–ம் நாள்]
காலை 5 மணிக்கு ஹரித்வாரிலிருந்து புறப்பட்டு மாலை 5 மணிக்கு ராம்பூர் அடைந்து ஓய்வு

28–9–'96 சனி [11 ம் நாள்]
காலை 6 மணிக்கு ராம்பூரிலிருந்து கேதார்–நாத் பார்த்து மாலை ராம்பூர் வந்து ஓய்வு

29–9–'96 ஞாயிறு (12 ம் நாள்)
காலை 5 மணிக்கு பத்ரிக்கு புறப்பட்டு அங்கு ஓய்வு.

30–9–'96 திங்கள் [13–ம் நாள்]
பத்ரிபார்த்து ஓய்வு.

1–10–'96 செவ்வாய் (14–ம் நாள்)
பத்ரியிலிருந்து காலை 6 மணிக்கு புறப்பட்டு ஸ்ரீ நகர் வந்து ஓய்வு.

2–10–'96 புதன் [15–ம் நாள்]
காசி–ஹிமாலய தீர்த்த யாத்திரிகள் பயணம் முடிந்து டெல்லிக்கு திரும்பி செல்ல போகிறார்கள் சதுர்தாம யாத்ரிகள் உத்தரகாசிக்கு சென்று ஓய்வு எடுக்கிறார்கள்.

3–10–'96 வியாழன் (16ம் நாள்)
காலை 6 மணிக்கு உத்தரகாசியிலிருந்து புறப்பட்டு சம்பா, டெஹ்ரி, தராஸு, பர்கோட்வழி சாயனாசட்டி ஊரை அடைந்து ஓய்வெடுக்கிறோம்.

டெஹ்ரி

பழையதோர் அரசனின் தலைநகரம் ராமதீர்த்த சுவாமிகள் ஜலசமாதி கொண்ட பிலங்கா நதி இங்கு பாகிரதி கங்கையுடன் கலக்கிறது. சங்கம தலத்தில் ஒரு கணபதி கோவில் இருக்கிறது சுவாமி தயானந்த சரசுவதி சுவாமி விவேகானந்தர்' சுவாமி ராமதீர்த்தர் முதலியோர் தவஞ்செய்து சித்தி பெற்ற இடமெனக் கூறுவர்.

தராஸு

ஒரு சிறிய நகரம் யமுனோத்திரி கங்கோத்ரிப் பாதைகள் பிரியுமிடம் இது.

பர்கோட்

இயற்கையழகு வாய்ந்ததோர் மலைக் கிராமம் யாத்ரிகள் தங்குவதற்கான வசதிகள் இங்குண்டு

சாயனா சட்டி

யமுனையின் கரையிலுள்ளதோர் அழகிய கிராமம். கருமையான பாறைகளில் மோதி தெறித்து வெண்ணிறத்தோடு பாயும் யமுனா நதியைக்கண்டவர் புளகாங்கிதம் கொள்வர்,

4-10-'96 வெள்ளி [17-ம் நாள்]

காலை 5 மணிக்கு சாயனாசட்டியிலிருந்து கிளம்பி ஹனுமான்சட்டி வழி யமுனோத்தரிக்குப் புறப்படுதல். மாலை 6 மணிக்கு சாயனாசட்டியில் ஓய்வு.

ஹனுமான்சட்டி

இங்கே ஹனுமான்கங்கை என்பதோர் சிறியநதி யமுனையில் வந்து சேருகிறது. இது தற்போது ஒரு சிறு நகரமாக மாறியிருக்கிறது. இதுவரையிலும் பேருந்து வந்து சேரும் அதன் பிறகு யமுனோத்தரி வரையிலும் யாத்திரை கஷ்டமானது.அதனால்குதிரைமீதோ,டோளியிலோ ஏறிசெல்வது நல்லது. ஹனுமான் சட்டியிலிருந்து ஜானகிச்சட்டிவழி 13 கி.மீ. போகும்போது யமுனோத்தரியை அடையலாம்.

யமுனோத்தரி

அளவில்லா இயற்கை அழகில் தவழ்ந்து நிற்கும் யமுனோத்தரி சதுர்தாமங்களில் ஒன்றான தோர் திருத்தலமாகும். 10500 அடி உயரமுள்ள இவ்விடத்தில் ஒரு கோவிலும் வெந்நீர் ஊற்றுகளும் உண்டு. இங்கிருந்து பார்த்தால் யமுனா நதி ஒரு மலைச்சிகரத்திலிருந்து கிளம்பிக் கீழிறங்கிப் பாய்ந்து வருவதைக் காணலாம் இங்கு யமுனையின் பாய்ச்சல் வடதிசை நோக்கி ஆகும் அதனாலேயே யமுனா + உத்தரி = யமுனோத்தரி என்ற பெயர் வந்தது, ஆறுகள் வடக்கு நோக்கிப் பாய்கின்ற இடங்களை எல்லாம் புண்ணியத்தலங்களாக இந்துக்கள் வழிபட்டு வருகின்றனர். யமுனோத்தரியும் அதனாலேயே தீர்த்ததலமானது. நான்கு வெந்நீரூற்றுகள் இங்குள்ளன ஒன்றில் சுமாரான சூடுள்ள வெந்நீர், மற்றொன்றில் அதைவிடக் கூடுதல் சூடுள்ள வெந்நீரும், உண்டு இந்தக் குண்டுகளுக்கு மேலே சதுரவடிவமுள்ள இன்னொரு குண்டு. அதன் நீர் கொதிக்கும் சூடு யாத்திரிகள் அரிசி, பயறு, உருளைகிழங்கு ஆகியவைகளைக் கிழிகட்டி அதில் போட்டு 10 நிமிடம் கழிந்தால் அது வெந்து பக்குவமாய்விடும். இவ்வுணவுகளை பிரசாதமாக பயணிகள் தங்கள் வீடுகளுக்கு எடுத்துச்செல்வர்.

யமுனோத்தரியின் ஒரு பாகத்தில் மார்க்கண்டேயன் தவஞ்செய்த இடம் அங்குள்ள மார்கண்டாசிரமத்தின் முன்னரும் ஒரு வெந்நீரூற்று உண்டு.

'யமுனாதிவ்யசிலா' என்றழைக்கப்பெறும் கற்சிலையை பயணிகள் வழிபடுகின்றனர். இச்சிலையின் பின்னாலிருந்து நீராவி ஒலியெழுப்பிக்

கொண்டு கிளம்பி வருகிறது இந்நீராவி குளிர்ந்து நீராகிப் பாறைவழி ஒழுகி நதியில் சேருகிறது.

கம்பீரமும் இயற்கை அழகும் வாய்ந்த யமுனோத்தரியில் சென்று சேருவது மிகவும் கஷ்டமெனினும் பக்தர்களுக்கு முக்தி நல்கும் புண்ணியபூமியாகும் இது யமுனோத்தரியில் தீர்த்த மாடி பூஜைகள் முடித்து அன்று தானே மலையிலிருந்து இறங்கி சாயனாச்சட்டியை அடைந்து ஓய்வெடுத்தல்.

5–10–'96 சனி (18–ாம் நாள்)

காலை 6 மணிக்கு சாயனாசட்டியிலிருந்து கிளம்பி 11 மணிக்கு உத்தர்காசியை அடைந்து கோவில் தரிசனம் செய்தபின் அங்கேயே ஓய்வு.

உத்தர்காசி

ஒரு தெய்வத்தலம். ரிஷிமுனிவர்கள் வாழுமிடம். ஸௌம்ய காசி என்பது புராணப் பெயர் இங்கொரு பெரிய சிவாலயமுண்டு கலியுகத்தில் ஸ்ரீ பரமேசுவரன் பூர்வகாசி (வாரணாசி) யிலிருந்து உத்தர்காசியின் அமைதியான கோயிலுக்கு தனது இருப்பை மாற்றியிருக்கிறார் என்று கூறுவர். மிகப்பெரிய வடிவுடைய ஒரு சிவலிங்கம் இங்கே பூசிக்கப்படுகிறது. வழிபடுபவர்களின் எல்லா வகைத் துன்பங்களையும் இங்குள்ள இறைவன் தீர்த்தருள்வார் என்பது நம்பிக்கை இதைத்தவிர காலபைரவக்ஷேத்திரம், பரசுராம க்ஷேத்ரம், தத்தாத்ரேயக்ஷேத்திரம், அன்னபூர்ணா க்ஷேத்திரம், முதலிய எண்ணற்ற சிறிய ஆலயங்கள் உத்தர்காசியிலுள்ள கடோபநிஷத் வழி புகழ்பெற்ற நசிகேதஸ் இங்கு தவஞ் செய்துள்ளார், பரசுராம பகவானும் இங்கே தவமியற்றியுள்ளார்

பாசுபதாஸ்திரம் வாங்குவதற்காக அர்ஜுனன் தவஞ்செய்து கடைசியில் வேடனாக உருமாறிவந்த சிவபெருமானுடன் போர் செய்ததும் பின் அர்ஜுனனது தவத்தை மெச்சி இறைவன் அவருக்கு பாசுபதப்படை நல்கியதும் உத்தர்காசி யில் தான என புராணங்கள் கூறுகின்றன.

அருகாமையிலுள்ள வாரணாவத மலையின் கீழே தான் பாண்டவர்களை வஞ்சனையால் கொல்வதற்காக துரியோதனன் அரக்கு மாளிகைக் கட்டியிருந்தது தற்கால ரிஷிமார்களில் சிறந்தவ ரான தபோவன சுவாமிகள் வாழ்ந்து சமாதி யடைந்தது இங்கு தான் சுவாமிகளின் சீடராகிய சின்மயானந்த சுவாமிகள் தபோவன குடியில் ஒரு பெரிய ஆசிரமம் நிறுவியிருக்கின்றார். உத்தர்காசி தற்போது நாகரீகம் வளர்ந்த நகரமாகத் திகழ்கிறது.

6–10–'96 ஞாயிறு (19 –ம் நாள்)

உத்தர்காசியிலிருந்து காலை 7 மணிக்குக் கிளம்பி பராசர முனிவர் ஆஸ்ரமம் ஹர்சில், பைரவகாட் என்ற இடங்களைத் தாண்டி கங்கோத்ரியை அடைந்து ஓய்வு.

குளிர் அதிகமாய் இருந்தால் கங்கோத்தரி தரிசனத்துக்கு பின் இரவு உத்தரகாசி வந்து ஓய்வு.

பராசர முனிவரின் ஆசிரமம்

வேதவியாசரின் பிதாவான பராசரமுனிவரின் ஆசிரமம் அழகுமிக்க பூக்களுடன் கூடிய செடி கொடிகளால் கண்களுக்கு குளிமையூட்டும் அழகான பூங்காவனம் தான் இந்த ஆசிரமம் இங்கே இரு பக்கமும் உயர்ந்து நிற்கும் மலை உச்சியிலிருந்து ஓடி வரும் வென்னீர் ஊற்றுக்கள் இவ்விடத்தின் குளிரை குறையசெய்கிறது பயணிகளுக்கு பயன் படும் இரு வென்னீர் நீர்சோலைகள் இவ்வாசிரம வளாகத்தில் உண்டு, கங்கோத்திரி செல்லும் பயணிகள் வழியில் இங்கு வந்து புனித ஸ்நானம் செய்து பின் கங்கோத்திரி செல்கிறார்கள்

ஹார்சில்

இயற்கை அழகு வாய்ந்ததோர் மலைக் கிராமம். பல சிறிய நதிகள் பாகிரதியில் வந்து இங்கு கலக்கின்றன. இங்கு இருந்து கீழே பாகீரதி (கங்கை) சாந்தமாக பாய்ந்து செல்கிறாள்

பைரவாகாட்

திபெத்திலிருந்து ஒழுகி வரும் ஜன்னு கங்கா பாகீரதியில் கலக்குமிடம் இங்கோர் பைரவமூர்த்தியின் ஆலயமுண்டு அதைசுற்றிலும் அடர்ந்த காடுகளைகாணலாம்.

கங்கோத்தரி

தேவதாரு மரங்கள் நிறைந்ததும் இயற்கை அழகு மிக்க நறுமணம் பொருந்தியதுமான ரிஷிமார்களின் தவச்சாலை

புராணப்புகழ்பெற்ற பற்பல மகரிஷிமார்கள் இங்கு தங்கியிருந்தார்கள்.

கங்காநதி இங்கே வடதிசை நோக்கி ஒழுகுகிறது அவ்வாறு கங்கோத்திரியாகப் புகழ்பெற்ற இந்தப் புண்ணியபூமி சதுர்தாமங்களிலொன்றாகும் 10,020 அடி உயரமுள்ள இத்தலத்தில் முதன் முதலாக கங்காதேவிக்கு ஓராலயம் அமைத்தது கேரளீயனாகிய ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள் ஆவார் அந்த ஆலயத்தை கூர்க்கா ஜாதியரின் அரசனாகிய அமர்சிங்தாப்பா என்பவர் புதுப்பித்தார். இயற்கை கோபத்தால் அக்கோவில் சிதைந்த போது ஜயப்பூர் ராஜா அதனைப்பழுது பார்த்து அழகு படுத்தினார். பயணிகளின் மனத்தை கவரும் அனேக சிறப்புக்கள் இங்கு உண்டு அவைகளில் ஒன்று தான் கௌரீகுண்டு மிகவும் ஆழமானதோர் பள்ளத்தில் பகீரதி கங்கை வீழ்கிற இடம் இது பகீரதனின் வேண்டுதலுக்கிணங்க சிவபெருமான் இங்கு நின்று கொண்டு

தான் கங்கை வெள்ளப் பெருக்கை தனது சடையில் தாங்கியது கங்கை வந்து வீழ்ந்ததின் வேகத்தால் சிவபெருமான் பள்ளத்தில் சாயவே, கௌரீதேவி அவரை தாங்கினாள் ஆழங் காண முடியாத அந்தப் பள்ளத்தில் ஒரு சிவலிங்கம் இருப்பதாக கூறுவர்.

கௌரீகுண்டுக்கு மேலே பிரம்ம குண்டு உள்ளது. இங்கு பரந்ததோர் மணற்பரப்பு உள்ளது. இங்கே பக்தர்கள் தர்ப்பணாதிகள் செய்வார்கள் (கடுங்குளிர் காரணமாக இங்கு யாரும் குளிப்பதில்லை கங்காஜலம் சிறிது கையிலெடுத்து உடம்பில் தெளித்துக்கொள்வர்)

கங்கா தேவியை பூமியில் கொண்டு சேர்க்க தவஞ்செய்த பகீரதன் அமர்ந்திருந்த பாறை–பகீரத சிவபக்தர் உள்ளத்தைக் கவருமோர் இடமாகும் அந்தப் பாறை மரப் பலகையால் மூடப்பட்டுள்ளது தேவைப்பட்டால் பூசாரி திறந்து காட்டுவார். ''பாவிகளைப் புனிதமாக்கும் பாகீரதியின் பிறப்பிடமாகிய கங்கோத்ரியில் சென்று கங்காதீர்த்தமாடி, புனித சங்கைக் கரையில் இருந்தவாறு, 10 நிமிட நேரமாவது சாக்ஷாத் பிரம்ம சொரூபிணியான, சச்சிதானந்த மூர்த்தியான கங்கா தேவியை பக்தி பூர்வமாக தியானம் செய்கிற ஒருவனது மனிதபிறவிப் பயன் பெற்றது. ஜன்ம சாபல்யம் கிடைக்கும் இவ்வாறு தபோவன ஸ்வாமிகள் தமது ''ஹிமகிரிவிஹாரம்'' என்ற மலையாள நூலில் எழுதியுள்ளார் கங்கோத்திரியைப்பற்றி கந்த புராணம் கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறது.

ததேதத் பரமம் ப்ரம்ம த்ரவரூபம் மஹேஸ்வரி கங்காக்யம் யத்புண்யதமம் ப்ருதிவ்யாமாகதம்-சிவே

7-10-'96 திங்கள் 20-ாம் நாள்
கங்கோத்திரி அல்லது உத்தர்காசியில் ஓய்வு.

8-10-'96 செவ்வாய் 21-ாம் நாள்
கங்கோத்திரியிலிருந்து, (உத்தரகாசி) காலை 6 மணிக்கு கிளம்புதல் மாலை 6 மணி ஹரித்வார் வந்து சேர்ந்து ஓய்வெடுத்தல்.

9-10-'96 புதன் 22-ாம் நாள்
ஹரித்வாரில் ஓய்வெடுத்தல்.

10-10-'96 வியாழன் 23-ாம் நாள்
காலை 6 மணிக்கு ஹரித்வாரில் கங்கல் என்ற தீர்த்த கட்டத்திற்குச் சென்று சற்குரு அபேதானந்த மகராஜின் சமாதிபூஜை மறுபடியும் செய்வோம்.

பிறகு அங்கிருந்து புறப்பட்டு டெல்லி வந்து ஓய்வு

11-10-'96 வெள்ளி 24-ம் நாள்
காலை 11 மணிக்கு K.K. எக்ஸ்பிறஸில் பயணம்

12-10-'96 சனி 25-ாம் நாள்
ரெயிலில்

13-10-'96 ஞாயிறு 26-ாம் நாள்
காலை 4-40 திருவனந்தபுரம் வந்து சேருதல்

இத்துடன் சதுர்தாம யாத்திரை முற்றுபெறுகிறது.

ஹரி ஓம்,

தீர்த்த யாத்திரிகள் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள்:

1) காசி ஹிமாலய தீர்த்த யாத்திரையில் பங்கு பெறுவோர் 18–9–1996 மாலை 4–40 மணிக்கு புறப்படும் கொச்சி ஹௌறா எக்ஸ்–பிரஸ் (வண்டி எண் 6315) வண்டியில் எர்ணாகுளம் சந்திப்பிலிருந்து கல்கட்டாவுக்கு பயணமாகுகின்றனர். இவ்வண்டி திருச்சூர். பாலக்காடு, ஈரோடு, சேலம், சென்னை வழி கல்கட்டா செல்கிறது.

பயணிகள் எந்த ரெயில் நிலையத்தி–லிருந்து குழுவுடன் சேர்ந்து கொள்ளலாம் வண்டி புறப்படுவதற்கு 1 மணிக்கூர் முன்ன–தாக பயணிகள் ரயில் நிலையம் வந்து சேர வேண்டும். திருவனந்தபுரம் சுற்றுவட்டாரத்தி லிருந்து வரும் பயணிகள் 8–9–'96 காலை 9–40 க்கு K.K. எக்ஸ்பிரஸ் [Connectiontrain) –ல் எர்ணாகுளம் செல்கிறார்கள்.

சதுர்தாம யாத்திரையில் பங்கு கொள் வோர் 1996 செப்டம்பர் 18 –ாம் தேதி புதன் திருவனந்தபுரத்திலிருந்து காலை 9–40 மணிக்குள்ள K.K. எக்ஸ்பிரஸில் உத்தரமதுரைக்கு கிளம்புகின்றனர்.

2) போகி, பெட்டி நம்பர், சீட் நம்பர், என்பவை களை பயண நாளுக்கு முன்னதாகவே பயணிகளைத் தெரிவிப்போம்.

3) பிற ரயில் நிலையங்களிலிருந்து பயணம் தொடங்க விரும்பும் பயணிகள், எந்த ரயில் நிலையத்திலிருந்து ஏறுவோம் என்ற விவரம் முன்னதாகவே தெரிவிக்க வேண்டும்.

4) பயணிகள் தங்கள் முகவரியை (முழுப் பெயர், வீட்டுப்பெயர், கிராமம், தாலுகா ஜில்லா, போண் நம்பர் இருக்குமாயின் அதுவும்) வயது ஆகியவைகளை முன்னதாகவே தெரிவிக்க வேண்டும்.

5) மிக நெருங்கிய ஒரு உறவினரின் முகவரி கூட தெரிவிக்க வேண்டும். (போண் நம்பர் இருக்குமாயின் அதுவும்)

6) தீர்த்தயாத்திரை வேளையில் மஞ்சள் நிறம் ஆடைகள் அணிந்து வருதல் நலம்.

7) யாத்திரை வேளையில் தங்க நகைகள் கட்டாயமாக அணியக்கூடாது.

8) சதுர்தாம யாத்திரைக்குரிய வாகன கட்டணம் உணவு, ஜாகை முதலியவைகளுக்கான 8300/– ரூபாயும், காசி–ஹிமாலய யாத்திரைக்கு 8500 – ரூபாயும் தரல் வேண்டும்.

பெயர் பதிவு செய்யும் போது ரூ 3000/– முன் பணமும் மீதி பயணம் கிளம்புவதற்கு ஒரு மாதம் முன்னரும் செலுத்த வேண்டும். பெயர் பதிவுசெய்யும் போதே முழுபணமும் செலுத்துவது மிக நல்லது.

9) 'டிராப்ட்' அனுப்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

சுவாமி அம்பிகானந்தா
ஸ்ரீ சாரதாமந்திர், பார்வதிபுரம்
வெட்டூர்ணிமடம்–P.O.
நாகர்கோவில்–629 003
கன்னியாகுமரி மாவட்டம்.

10) தீர்த்தயாத்திரைக்குள்ள D.D.எடுக்கும்போது Swami Ambikanandaji; State Bank of Travancore நாகர்கோவில் கன்னியாகுமரி-ஜில்லா என்று எடுத்து அனுப்பவும்.

11) யாத்திரைக்கு பெயர் பதிவு செய்த பின்னர் வரமுடியாதவர்களுக்குப் பணம் திருப்பித்தரப் படமாட்டாது ஆனால் யாத்திரை கிளம்பு வதற்கு பதினைந்து நாட்கள் முன்னதாக வேறொருவரை தனக்குப்பதிலாக அனுப்பலாம் ஆனால் ரயில் பெட்டியில் படுக்கை ஒரு வேளைதான் கிடைக்கும். இந்த குறிப்பிட்ட நாள் கழிந்து விட்டால் இதுவும் முடியாது.

12) கௌரீகுண்டத்திலிருந்து கேதார்நாதம் வரை யிலுமுள்ள 14 கி.மீ. தூரம் குதிரைகளிலோ டோலியிலோ ஏறிப்போக வேண்டும். 13 கி மீ யமுனோத்தரியிலும் இவ்வாறே செல்ல வேண்டும் யாத்திரிகள் ஒரு சங்கமாக செல்வதால் கால்நடை யாத்திரை இயலாது அது அனுமதிக்க முடியாது. குதிரைசவாரிக்கு சுமார் 450,- டோளிக்கு ரூ 1000/-ம் கொடுக்க வேண்டும் அந்தச் செலவை பயணிகளே கொடுக்க வேண்டும். பயண வேளையில் டிக்கட் வாங்கிக் காணவேண்டிய பொருட் காட்சி சாலை முதலிய இடங்களுக்கான செலவும் பயணிகளே செய்ய வேண்டும். ரயில் பயணத்தின்போது உணவு தயார் செய்ய இயலாததால் அந்நாட்கள் உணவு செலவுகள் அவரவர்கள் செய்து கொள்ள வேண்டும் ஹரித்வாரில் கங்கைகரையில் பஸ் செல்ல முடியாது ஆசிரமங்களில் ஆட்டோவில் செல்ல ஆகும் செலவும் பயணிகளே செய்ய வேண்டும்.

காசி அலகபாத் ஹரித்வார் ஆகிய இடங்களில் போட்டு மற்றும் றோப்வே செலவுகளும் பயணிகளே மேற்கொள்ள வேண்டும் காசி ஹிமாலயா தீர்த்தயாத்திரிகளுக்கு தான் நேப்பாளம் செல்ல முடியும். காசியில் தங்கி ஓய்வு எடுக்கும் $1\frac{1}{2}$ நாளில் தான் நேப்பாளம் செல்வோர் செல்ல முடியும் நேப்பாளம் போய்வர விரும்பும் பயணிகள் விமான டிக்கட்டுக்கான ரூ 2000 – முன் பணத்துடனோ அல்லது பயணம் துடங்குவதற்கு இரண்டு மாதங்கள் முன்னமே கண்டிப்பாக செலுத்தியாக வேண்டும் ஒரு வழிகாட்டியின் செலவும் அங்குள்ள எல்லா செலவுகளும் அவரவர்களே செய்ய வேண்டும்.

13) பயணவேளையில் பச்சை தண்ணீர் குடிக்க கூடாது. இரயில் பயணம் முடிந்ததும் பயணிகளுக்கு குடிப்பதற்கு வென்னீர் கொடுக்கப்படும். அதை அவரவர்கள் பிளாஸ்கில் வைத்து கொள்ள வேண்டும்.

14) பயண வேளையில் பெரும்பாலும் தங்குவது ஆஸ்ரமங்களிலும், தர்மஸ்தலங்களிலும் ஆகும். பெண்களுக்கும் ஆண்களுக்கும் தனித்தனி இடங்கள் கொடுக்கப்படும். விரும்பாதவர்களுக்கு அவரவர்கள் செலவில் தங்குவதற்கு முறிகள் எடுக்க வேண்டுமானால் அதற்கான ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படும்

15) இது மிகவும் பெரியதொரு புனிதப்பயணம் ஆதலால் நேரம் தவறாமை, பயணகளுக்கிடையே கூட்டுறவு, இவை ஒன்றுபட்டு இருந்தாலே இப்பயணம் முழு வெற்றிபெறும் காலை, மாலை நடைபெறும் தியானம், பூஜைகளில் எல்லா பயணிகளும் கலந்து கொள்ள வேண்டும்.

16) பயணம் இன்பமாய் அமைவதற்கு மூட்டைகள் மிகவும் குறைவாகவே கொண்டுவர வேண்டும். ஒரு நபர் 15 கிலோ பளுவிற்கு மேல் சாமான்கள் கொண்டு வருதல் கூடாது. இது அவசியம் கையாள வேண்டிய விதிமுறையாகும்,

17) பயணிகள் எடுத்து வர வேண்டிய பொருட்கள்:–

i) உணவு தட்டு–1, கூட்டுவைக்க சிறியதட்டுகள்–2, கரண்டி–1, கப்பு–1 மக் (குவளை)–1, தண்ணீர் பாட்டில்–1, பிளாஸ்க்–1. தோள்பை, மெழுகுவர்த்தி, தீப்பெட்டி.

ii) மிதமான அளவில் படுக்கை. ஒரு தலையணை, கம்பிளி அல்லது பெட்ஷீட், ஒரு போர்வை, மடக்குபாயில் இவைகளை மடக்கி பொதிந்து பாது காக்க ரக்ஸின் அல்லது பிளாஸ்டிக் பேப்பரிலோ பொதிந்து கட்டி வைக்க வேண்டும். இம்முறையில் செய்யா விடில் பயண வேளையில் படுக்கை வண்டியின் மேலே போடும் போது மழை, பனி இவைகளால் நனைந்து விடும் நனைந்து விட்டால் படுக்க சிரமப்பட வேண்டி வரும்.

iii) ஸ்வெற்றர், மப்ளர், ஸோகஸ் (காலுறை) கிளவுஸ் (கையுறை) கேன்வாஸ்ஷு, கம்பிளி இவை ஹரித்வாரில் விலை குறைவாக வாங்கலாம்.

iv) டார்ச்லைட், தேவையான மருந்துகள் மழைக்கோட்டு ஆகியவை அவசியம் வேண்டும்.

v) பயணத்தில் பங்கு பெறும் தாய்மார்கள் எல்லோரும் திருவிளக்குபூஜை செய்வதற்கு வசதியாக ஒரு சிறிய குத்துவிளக்கும் கூட கொண்டுவர வேண்டும்

15) **உணவு:** காலை கருப்புகட்டி, சுக்கு, மிளகு, சேர்த்து காப்பி பயணத்தின் போது பல சிறிய நோய்களுக்கு இது ஒரு மருந்தாகும் 8 மணிக்கு இட்லி, உப்புமா, புட்டு, புரோட்டா, இவைகளுக்கான கறிகளுடன் மாறி, மாறி வழங்கப்படும்.

மதியம்: பயண நேரமானால் தயிர்சாதம் சாம்பார் சாதம், புளி சாதம், லெமன் சாதம், இவை மாறி மாறி வழங்கப்படும். தங்குமிடம் மானால் கறிகளுடன் சாப்பாடு வழங்கப்படும்,

இரவு: கஞ்சி கறிகளுடன்.
அனைத்து பயண நாட்களிலும் மேல் கூறியபடி உணவு வழங்கப்படும்.
ஊறுகாய்கள் அவரவர் தேவைக்கேற்ப கொண்டு வரவும். எங்களிடமும் தேவைக்கு இருக்கும்.

16) கூடுதல் விவரங்கள் அறியவிரும்புவோர் கடிதம் மூலமோ நேரடியாகவோ தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

சுவாமி அம்பிகானந்தா,
ஸ்ரீ சாரதாமந்திர், பார்வதிபுரம்,
வெட்டூர்ணிமடம்–P.O.
நாகர்கோவில்–629 003.
கன்னியாகுமரி மாவட்டம்.

திருவனந்தபுரத்தில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ஸ்ரீகிருஷ்ணா டூறிஸ்ட்ஹோம்,
சென்றல் தியேட்டர் சமீபம்
பழவங்காடி,
திருவனந்தபுரம்.
போண்:

இவண்,

STD: 04651 **எஸ். கிருஷ்ணன் நாயர்**
போண்: குழித்துறை 76169 கண்வீனர்.

குறிப்பு: எல்லா வருடமும் செட்டம்பர், அக்டோபர் மாதங்களில் இந்த புனிதப்பயணம் நடைபெறும்.
சதுர்தாம யாத்திரைக்கு 30 பேர் மட்டுமே சேர்த்துக்கொள்ளப் படுவார்கள்.
பயணத்தின் போது புகழ்மிக்க இடங்களையும் பயணிகளையும் இணைத்து ஒரு வீடியோ படம் எடுக்கப்படும். இதற்காகும் செலவு தருபவர்களுக்கு காஸட் கொடுக்கப் படும்.

ஒரு முக்கிய அறிவிப்பு

கன்னியாகுமரி மாவட்டத்தில் பார்வதிபுரம் நகரத்தில் செயல்பட்டு வரும் ஸ்ரீ சாரதாமந்திரம் ஆலயங்கள் தோறும் திருவிளக்கு பூஜை மற்றும் சமயமாநாடு இவைகள் மூலமாக இந்துசமயத்திற்கு தொண்டாற்றி வருகின்றன.

மந்திரத்தின் அன்னதான பண்டுக்கான பக்த பெருமக்களின் உதவி முன்னைப்போல் தொடரும் என எதிர்பார்க்கிறோம்.

சென்ற வருடம் இல்லாத சிறப்பு இந்த வருட புனித பயணத்திற்கு உண்டு. கங்கோத்ரி யமுனோத்ரி, கேதார்நாத், பத்ரிநாத், என்ற சதுர்தாமயாத்திரை சிறப்பு வாய்ந்ததாகும். அதில் பங்கு கொள்ள முன்ஜென்ம புண்ணியாத்மாக் களுக்கே முடியும். இந்த புனித பிரயாணத்தில் பங்கு கொள்ள நாங்கள் அவர்களை அன்புடன் அழைக்கிறோம்.

30 யாத்திரிகள் மட்டுமே இந்தயாத்திரைக்கு சேர்த்துக்கொள்ளப் படுவார்கள்.

இவண்,
சுவாமி அம்பிகானந்தா

காசி ஹிமாலய யாத்ரிகள்
அனுப்பும் விண்ணப்பம்

பெயர் :

ஆண்/பெண் :

தந்தை/புருஷன் :

வயது :

வீட்டு பெயர் :

ஊர் :

கிராமம்/பட்டணம்:

மாவட்டம் :

தபால் நிலையம்
& பின்கோடு }

பக்கத்து டெலிகிராம் நிலையம்:

வேலை:

போண் எண்:

புறப்படும் ரெயில் நிலைய பெயர்:

திரும்ப இறங்கும் இடம்:

முன்பணம் அனுப்பும் ரூ:

நெருங்கிய உறவினர் பெயரும் விலாசமும்:


நேப்பாள் பயணம் உண்டு/இல்லை.

அமைப்பாளரை தெரியப்படுத்த விரும்பும் விவரங்கள்:


இடம் : ஒப்பம்

நாள் :

N. B: முன் பணத்துடன் இவ்விண்ணப்ப படிவமும் கண்டிப்பாக அனுப்ப வேண்டும்.


ROUTE MAP OF
MATHURA ALLAHABAD VARANSI
GAYA AND CULCUTTA
N
S
E
W
RUDRAPRAYAG
SHRINAGAR
DEVAPRAYAG
RISHIKESH
HARDWAR
BHAGIRATHI
BHILANGNA
71
33
157
201
NEW DELHI
140
MURADABAD
350
FIZABAD
AYODHYA
GANDAKI
125
LUCKNOW
286
155
PATNA
140
GANGA
GANGA
FALGUNA
153
VRINDAVAN
MADHURA
KANPUR
GANGA
79
191
277
19
34
AGRA
YAMUNA
ALLAHABAD
118
VARANASI
34
GAYA
32
238
461
SONE
DHANBAD
HOOGLY
CULCUTTA
BANGLADESH

SACRED HEIGHTS.



	HARDWAR	MUSSOORIE	YAMNOTRI	GANGOTRI	UTTAR KASHI	TEHRI	RISHIKESH	DEVPRAYAG	SRINAGAR	NAINITAL	ALMORA	KARAN PRAYAG	JOSHIMATH	FLOWER VALLEY	HEMKUNT	KEDARNATH	BADRINATH
KEDARNATH																	239
HEMKUNT																270	40
FLOWER VALLEY															9	259	47
JOSHIMATH														39	40	230	48
KARAN PRAYAG													80	119	120	111	128
ALMORA												160	240	279	280	240	280
NAINITAL											65	212	292	331	332	322	340
SRINAGAR										277	225	165	145	184	85	114	193
DEVPRAYAG									35	312	260	100	180	218	[illegible]	149	230
RISHIKESH								71	105	382	330	170	252	291	292	223	301
TEHRI							83	60	60	337	225	125	205	244	245	220	253
UTTAR KASHI						65	154	134	125	402	350	190	280	319	320	239	308
GANGOTRI					100	135	248	234	225	502	450	290	370	409	410	348	418
YAMNOTRI				228	128	148	222	215	250	527	475	315	395	434	435	368	446
MUSSOORIE			140	221	150	78	78	147	182	487	385	248	328	357	368	299	377
HARDWAR		93	245	271	177	105	23	54	124	405	353	193	275	314	315	246	324
DELHI	201	288	446	472	378	305	224	295	324	506	554	394	476	516	516	447	525

KASI - HIMALAYA PILGRIMAGE

C/o SWAMI AMBIKANANDA, SRI SARADASRAMAM
5/57, WEST STREET, COLACHEL - 629 251